தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (தேபோஆ)

ஆண்டு அறிக்கை

2019

முகவரி

241, பூங்கா வீதி,

கொழும்பு 05

இணையத்தளம்

www.ntc.gov.lk

மின் அஞ்சல்

info@ntc.gov.lk

துரித அழைப்பு

1955

NTC/PL/Annual Report / 2019 2020.05.15

கௌரவ போக்குவரத்துச் சேவைகள் முகாமைத்துவ அமைச்சர்,

போக்குவரத்துச் சேவைகள் முகாமைத்துவ அமைச்சு,

7ஆவது மாடி,

செத்சிறிபாய கட்டம் 11

பத்தரமுல்லை.

ஆண்டறிக்கை – 2019

1971இன் 38ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14 (2) பிரிவின் நியதிகளின் படியும் அரசாங்கத் தொழில் முயற்சிகளின் நல்லாட்சிக்கான வழிகாட்டல்களின் அத்தியாயங்கள் 05 மற்றும் 06 இன் பிரகாரமும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2019 திசெம்பர் 31ஆந் திகதி முடிவுற்ற ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை, வருடாந்த கணக்குகள் அறிக்கை மற்றும் கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை ஆகியவற்றை மிகவும் மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றேன்.

சஷி வெல்கம,

தலைவர்,

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

உள்ளடக்கம்

அத்தியாயம்	பக்கம்
ஆணைக்குழுவின் அங்கத்தவர் குழு	01
தலைவரின் செய்தி	03
மொத்தப் பகுப்பாய்வு	05
ஆணைக்குழுவின் கட்டமைப்பு	06
2019 ஆம் ஆண்டின் செயலாற்றுகை	07
வருடாந்த கணக்குகள்	35
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை	53

ஆணைக்குழுவின் அங்கத்தவர் குழு
2019 ஜனவரி முதல் 2019 திசெம்பர் வரை

1. திரு. ஜனக்க மல்லிமாரச்சி - தலைவர்
2. சட்டத்தரணி திரு. பிரசாத் டப்ளியூ சிறிமான்ன - உறுப்பினர்
3. திரு. டப்ளியூ.டீ. ஐவன் சனத் - உறுப்பினர்
4. திரு. பி.ஏ. சரத் பெரேரா - உறுப்பினர்
5. திரு. ஆனந்த விஜயரத்ன - உறுப்பினர் (பதவி வழி)
6. திரு. ஏ.எம்.ஆர்.ஜே.கே. ஜயசிங்க - உறுப்பினர் (பதவி வழி)
7. பட்டயப் பொறி. எஸ்.பி.டப்ளியு. ஜயசிறிவர்தன - உறுப்பினர்
8. திரு. ஏ.எம்.அசங்க தயாரத்ன - உறுப்பினர் (பதவி வழி)

சபைக் கூட்டம் மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்கள்

2019ஆம் ஆண்டினுள் நடாத்தப்பட்ட பணிப்பாளர் சபைக் கூட்டங்களின் எண்ணிக்கை 11 ஆகும்.

2019ஆம் ஆண்டினுள் நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்களின் எண்ணிக்கை 03 ஆகும்.

தலைவரின் செய்தி



நாட்டின் அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றும் செயற்பாட்டினுள் போக்குவரத்திற்கு பாரிய வகிபங்கொன்று சாட்டப்பட்டுள்ளது. ஏந்நாட்டிலாயினும் போக்குவரத்து வலையமைப்பின் வினைத்திறன், பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமூக மேம்பாடு குறித்து பெரிதும் செல்வாக்குச் செலுத்தும். ஆதன்படி, இலங்கையில் பொதுப் பேருந்து பயணிகள் போக்குவரத்துத் தொகுதியினை முறையாக, தரமிக்கதாக மற்றும் வினைத்திறன் மிக்கதாக ஆக்குவதற்கு தேவையான நியதிச்சட்ட செயற்பாடுகளை தொகுத்து, நாட்டின் போக்குவரத்துத் தேவைகளை முறைப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளைத் திட்டமிடுவதைப் பொறுப்பாகக் கொண்டுள்ளது.

1991 இல 37ஐக் கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் பிரகாரம் நிறுவப்பட்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, இலங்கை மக்களுக்கு வினைத்திறன்மிக்க மற்றும் சௌகரியமிக்க சேவையினை முறையாக வழங்கும் நன்னோக்கில் 2017ஆம் ஆண்டில் பல்வேறு செயற்றிட்டங்கள் பலவற்றைச் செயற்படுத்தியுள்ளது.

அரச திறைசேரி ஏற்பாடுகளின் கீழ் செயற்படும் 'சமூகத் தேவைகளைப் பூர்த்திசெய்தலை நோக்காகக் கொணட செயற்றிட்டங்களாக' பாடசாலை மாணவர்கள் உள மற்றும் உடல் ரீதியான கஷ்டங்களின்றி நேரகாலத்துடன் பாடசாலைக்கு செல்லும் மற்றும் பாதுகாப்பாக வீடு திரும்பும் வசதிகளைச் செய்து கொடுக்கும் நோக்குடன் 'சிசு செரிய' பேருந்துச் சேவையினைத் தொடர்ந்தும் மேற்கொள்ளுதல், போக்குவரத்து வசதிகளற்ற பிரதேசங்களில் வசிக்கும் மக்களுக்கு தமது நாளாந்த தேவைகளுக்காக நம்பிக்கைமிகு போக்குவரத்துச் சேவையொன்றினை வழங்கும் நோக்கில் 'கெமி செரிய' பேருந்துச் சேவை செயற்றிட்டத்தினைச் செயற்படுத்துதல், இரவு வேளைகளில் மற்றும் அதிகாலையில் பேருந்துச் சேவைகளில் காணப்பட்ட பற்றாக்குறையினால் பயணிகள் முகங்கொடுத்த அசௌகரியங்களை இல்லாதொழிக்க 'நிசி செரிய' பேருந்துச் சேவையினைச் செயற்படுத்துதல் முக்கிய இடம் வகிக்கின்றன.

இதற்கு மேலதிகமாக, தனியார் போக்குவரதது ஊடகங்களைப் பயன்படுத்தும் மக்களைப் பொதுப் பயணிகள் போக்குவரத்துச் சேவையின் பால் ஈர்ப்பதற்கும் பொதுப் பயணிகள் போக்குவரத்துத் துறையின் தரத்தினை விருத்தி செய்வதற்கும், பொதுப் பயணிகளான மக்களுக்கு நம்பகமான, பாதுகாப்புமிகு, வசதிமிக்க பொதுப் போக்குவரத்துச் சேவையொன்றினை வழங்குவதன் மூலம் பொதுப் பேருந்து பயணிகள் போக்குவரத்துச் சேவையின் தரத்தினை மேம்படுத்துதல் செயற்றிட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் பல செயற்படுத்தப்பட்டன. மேலும், பேருந்து இயக்குனர்களின் வியாபார எதிர்பார்ப்புக்களை நிவர்த்தி செய்வதற்கு இயலுமான வகையில் எல்லா பேருந்து ஓட்டுனர்களுக்கும்

சம சந்தர்ப்பத்தினை வழங்கும் விதத்தில் விஞ்ஞான ரீதியான ஒன்றிணைந்த சுழல்முறை நேர அட்டவணையைத் தயாரிக்கும் வேலைத்திட்டமும் தொடர்ந்தும் செயற்படுத்தப்படுகின்றன.

இதற்கு மேலதிகமாக, போக்குவரத்து அதிகார சபைகளின் முகாமைத்துவம், மாகாணங்களுக்கு இடையிலான பேருந்து உரிமையாளர்கள், பாடசாலை வாகன நெறியாள்கைக் குழு உட்பட பயணிகள் போக்குவரத்துத் துறையின்பல்வேறு தரப்பினரை அறிவுறுத்துவதற்காக 2019ஆம் ஆண்டில் புதிய செயற்றிட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டு செயலமர்வுகள் பல நடாத்தப்பட்டன.

மேலும், பொதுப் போக்குவரத்திற்காக புவியியல் நிலைமையினை அடிப்படையாகக் கொண்ட GPS தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வாகனங்களைக் கண்காணிப்பதன் மூலம் உடனடியாகப் பேருந்துகளை முறைப்படுத்தவும் பயணிகள் முறைப்பாட்டினை விசாரணை செய்தல் மற்றும் தகவல்கள் வழங்குதல் ஆகியவற்றிற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே, போக்குவரத்து தொடர்பில் திட்டமிடுகையில், புள்ளிவிபர அறிக்கை விசேட இடத்தினை வகிக்கின்றது. அதனால் போக்குவரத்து தொடர்பிலான அனைத்து தரவுகளையும் ஒன்று சேர்த்த அறிக்கை என்ற வகையில் போக்குவரத்து புள்ளிவிபர அறிக்கை முக்கியமானதாகும். தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் போக்குவரத்துத் துறைக்குரிய அரச நிறுவனங்கள் பலவற்றிலிருந்து தரவுகளை ஒன்று சேர்த்து பரந்த விடய பரப்பொன்று உள்ளடங்கும் விதத்தில் தேசிய போக்குவரத்து புள்ளிவிபர அறிக்கையினை வெளியிடுதலும் வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்றது.

இவ்வெல்லா செயற்றிட்டங்கள் மூலம் பொதுப் பயணிகள் போக்குவரத்துத் துறையின் தரத்தினை விருத்தி செய்தல், பாதுகாப்பு மற்றும் வினைத்திறன் மிக்க போக்குவரத்து சேவையொன்றினை வழங்குதல் என்பன நோக்காகக் கொள்ளப்படுகின்றன. நாளுக்கு நாள் அதிகரித்துவரும் வீதி நெருக்கடியினைக் குறைக்கும் நோக்கில் பொதுப் பயணிகள் போக்குவரத்துச் சேவையின் பால் ஈர்ப்பதற்கு பொதுப் பயணிகள் சேவைக்குரிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தற்போதைய அரசின் கொள்கையான சௌபாக்கியமிகு நோக்கினை அடியொற்றி பொதுப் போக்குவரத்துத் துறையின் வினைத்திறன் மற்றும் விளைப்பயனை மேம்பபட்டிற்காக நவீன மெதழில்நுட்பத்தினை அதிகமதிகமாகப் பயன்படுத்துவதன் மூலம் புதிய அரசாங்கம் பொதுப் போக்குவரத்துத் துறையில் நிறைவேற்ற எதிர்பார்க்கும் அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு மாண்புமிகு ஜனாதிபதி அவர்களுக்கும், கௌரவ பிரதமர் அவர்களுக்கும், கௌரவ போக்குவரத்து முகாமைத்துவச் சேவைகள் அமைச்சருக்கும் சக்தியாக அமைவதற்கு தோள்கொடுக்கும் போக்குவரத்து முகாமைத்தவச் சேவைகள் அமைச்சின் எல்லா அலுவலர்களுக்கும், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் குழுவிற்கும் மற்றும் அனைத்து பணிக்குழாத்தினருக்கும் பல்வேறு வழிகளில் ஆதரவு நல்கிய அனைத்து தரப்பினருக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சஷி வெல்கம
தலைவர்
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

மொத்தப் பகுப்பாய்வு

எமது நோக்கு

நாட்டினுள் சமூக-பொருளாதார அபிவிருத்தியினை ஏற்படுத்துவதற்காக தரமிக்க, ஆகுசெலவு விளைபயன்மிக்க மற்றும் பாதுகாப்புமிக்க ஒன்றிணைக்கப்பட்ட போக்குவரத்துக் கட்டமைப்பு மற்றும் சேவை ஆகியவற்றின் மூலம் இலங்கையின் எல்லா குடிமக்களினதும் பல்வேறுபட்ட போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்திசெய்தலை உறுதிப்படுத்துதல்.

எமது பணி

பயணிகள் போக்குவரத்து தொடர்பான தேசிய கொள்கைக் குறித்து இலங்கை அரசிற்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் பொதுமக்களின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றும் திறன்மிகு பஸ் போக்குவரத்து முறைமையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான ஒழுங்குபடுத்தற் சட்டகத்தை உருவாக்குதல்

எமது இலக்குகளும் /குறிக்கோள்களும்

- பேருந்துச் சேவையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை தரம் மிக்கதாகவும் போதிய அளவானதாகவும் உயர் மட்டத்தில் தொடர்ந்தும் பேணுதல்.
- வினைத்திறன்மிக்க போக்குவரத்து முறைமை ஒன்றினை அபிவிருத்தி செய்தல்
- தங்களுக்கு மிகவும் பொருத்தமான பேருந்துச் சேவையைத் தெரிவு செய்வதற்கு உதவும் விதத்தில் போக்குவரத்து முறைமை ஒன்றை அபிவிருத்தி செய்தல்
- பிரயாணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுள்ள செயற்பாட்டாளர்களின் உறுதிப்பாடு மற்றும் நிலைப்பாட்டினை உறுதி செய்தல்
- கிராமப்புற மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் பிரதேசங்களில் செயற்படுத்தப்படும்குறைந்த வருமானம் ஈட்டும் ஆனால் சமூக ரீதியில் அவசியமான பேருந்துச் சேவைகளுக்கு நிதி உதவி அளித்தல்
- பயணிகள் போக்குவரத்துப் பேருந்துச் சேவைகள் மூலம் ஏற்படும் சுற்றாடல் பாதிப்பைத் தடுப்பதற்கான ஒரு வழிமுறையினைத் திட்டமிட்டு அதனை அபிவிருத்தி செய்தல்
- பேருந்து இயங்கும் நேரத்தை ஒழுங்கமைப்பதன் மூலம் பேருந்துகளின் விளைபயனை அதிகரித்தல்
- பேருந்துகளை இயக்கும் வேளையில் பாதுகாப்பையும் ஒழுங்கையும் உறுதி செய்தல்
- மாகாணங்களுக்கிடையில் மற்றும் மாகாணச் சேவையில் ஈடுபடும் பேருந்து சேவைகளின் போக்குவரத்து முறைமைகளை ஒருங்கிணைத்தல்
- நாட்டின் மொத்த உழைப்புத் திறனை மேம்படுத்துதல்

ஆணைக்குழுவின் கட்டமைப்பு

ஆணைக்குழு மூன்று பதவிவழி அங்கத்தவர்களையும் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் போக்குவரத்து அமைச்சரினால் நியமிக்கப்பட்ட மேலும் ஐந்து அங்கத்தவர்களையும் கொண்டுள்ளது. ஆணைக்குழு ஒழுங்குசார் கட்டமைப்பு தலைவர், பணிப்பாளர் நாயகம் மற்றும் திட்டமிடல், இயக்கம் மற்றும் சேவைகள் கண்காணிப்பு, தர உறுதிப்பாடு, வெளியார் தொடர்பு, நிதி மற்றும் கொள்வனவு ஆகிய 4 திணைக்களங்களுக்குப் பொறுப்பாகச் செயற்படும் பணிப்பாளர்கள் நால்வரையும் கொண்டது.

2019ஆம் ஆண்டின் இறுதியில் ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 219 ஆக இருந்ததுடன், சேவையில் ஈடுபட்டுள்ள நிரந்தரப் பணியாளர்களின் எண்ணிக்கை 191 ஆகும்.

2019.12.31 ஆந் திகதியில் உள்ளவாறான தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஊழியர் எண்ணிக்கை

தொடரிலக்கம்	புதவிப் பெயர்	பணியாளர் தொகுதி	அங்கீகரிக்கப்பட்ட பணியணி	சேவையில் ஈடுபட்டிருந்த பதவியணியினர்
01	பணிப்பாளர் நாயகம்	HM 2- 1	01	01
02	பணிப்பாளர்	HM 1-1	04	03
03	உதவிப் பணிப்பாளர்	MM 1-1	17	13
04	கனிஷ்ட முகாமையாளர்	JM 1-1	21	21
05	முகாமைத்துவ உதவியாளர்	MA 4	36	35
06	முகாமைத்துவ உதவியாளர்	MA 2-1	3	1
07	முகாமைத்துவ உதவியாளர்	MA 1-1	76	71
08	சாரதி	PL 3	13	15
09	அலுவலக உதவியாளர்	PL 1	12	12
10	நேரக் காப்பாளர்	PL 1	33	18
11	தொழிலாளர்	PL 1	3	1
	மொத்தம்		**219**	**191**

மூலம் - கட்டுப்பாட்டுத் திணைக்களம், தேபோஆ

2017ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை

1. சமூக நலனை முதன்மைப்படுத்தும் பேருந்துச சேவையினை வழங்குதல்

போக்குவரத்தின் மீது சுமத்தப்பட்டுள்ள பாரிய பணிகளுள், போக்குவரத்திற்குத் தேவையான சட்டரீதியான செயற்பாடுகளைத் தொகுத்து நாட்டினுள் பயணிகள் போக்குவரத்துத் தேவைகளை முறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் முக்கிய பணியாகும்.

அதன்படி, இலங்கை வாழ் பொது மக்களின் போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு மாபெரும் பணியினை நிறைவேற்றும் ஒரே நோக்குடன் பல்வேறு வகையான போக்குவரத்துச் சேவை செயற்றிட்டங்கள் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அவற்றுள் பாடசாலைச் சிறார்களுக்காகவே ஒதுக்கப்பட்டுள்ள் 'சிசு செரிய' பேருந்துச் சேவையும், கிராமீய மக்களின் போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்திச் செய்வதற்காக 'கெமி செரிய' பேருந்துச் சேவையும், இரவு நேரப் பேருந்துச் சேவையினை முறையாக மேற்கொள்வதற்கு 'நிசி செரிய' இரவு நேரப் பேருந்துச் சேவையும் என வேலைத்திட்டங்களை இனங்கண்டு செயற்படுத்துப்பட்டுள்ளன. இம்முன்று சேவைகளும், பேருந்து இயக்குனருக்கு நிதியுதவி வழங்குவதை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள செயற்றிட்டங்களாகும். இதற்காக அரச மற்றும் தனியார் துறைகளின் பேருந்து இயக்குனர்களின் பங்களிப்பு பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

1.1 பாடசாலைப் பேருந்துச் சேவை செயற்றிட்டம் 'சிசு செரிய'



'சிசு செரிய' பேருந்துச் சேவை'

இலங்கையில் அநேகமான பிரசித்தி பெற்ற பாடசாலைகள் நகரத்தை அண்மித்ததாக அமையப் பெற்றுள்ளமையால், வருடாவருடம் கிராமப்புறப் பாடசாலைகளில் இருந்து நகர பிரசித்தமிக்க பாடசாலைகளுக்கு நகரும் மாணவச் சமூகம் படிப்படியாக அதிகரித்து வரும் போக்கு காணப்படுகின்றது. அத்துடன் பிரதான பாதைகளில் சேரும் வேன் வண்டிகளின் எண்ணிக்கையும்

படிப்படியாக அதிகரிக்கின்றது. இதன் காரணமாக காலை வேளையிலும் பகல் வேளையிலும் நகரத்தை அண்டிய பகுதியில் ஏற்படும் போக்குவரத்து நெருக்கடியினால் அதற்குள் அகப்பட்டுக் கொள்ளும் பாசாலை மாணவர்கள் மற்றும் அப்பாதைகளைப் பயன்படுத்தும் ஏனைய பொது மக்களும் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங் கொடுக்கின்றனர். இவ்வாறு மோட்டார் வண்டிகள் மற்றும் சிறிய, பெரிய வேன் வண்டி அதிக எண்ணிக்கையில் பிரதான வீதிகளில் சேர்வதனால் நகரத்தை அண்டிய பாதைகளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலுக்குத் தீர்வாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்ட காலத்தின் தேவையான, முக்கியமான வழிமுறையாக பாடசாலை மாணவர்களுக்காகவே ஒதுக்கப்பட்ட பேருந்துச் சேவையான ''சிசு செரிய'' பாடசாலை பேருந்துச் செயற்றிட்டத்தினைக் குறிப்பிடலாம்.

மேலும், இச்செயற்றிட்டத்தின் கீழ், பாடசாலை மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுத்துள்ள நலன்கள்அச்சிறார்களின் பெற்றோரும் பெரும் மன ஆறுதலைப் பெற்றுக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. நேரத்துக்கு பாடசாலைக்கு சென்றுகளைப்பின்றி கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டு, பாதுகாப்பாக வீடு திரும்பக்கூடிய வசதியினை ஏற்படுத்திக் கொடுப்பதே இச்செயற்றிட்டத்தின் நோக்காகும். சிறுவர் துஷ்பிரயோகத்தினைக் குறைத்துக் கொள்ளல், பெற்றோர்களுக்கு சலுகைக் கட்டண முறையொன்றினைப் பெற்றுக் கொடுத்தல் மூலம் நம்பிக்கைமிகு மற்றும் முறையான சமூக சேவையொன்றினை நிறைவேற்றுதல் இச்செயற்றிட்டத்தின் ஏனைய நோக்கங்களாகும்.

இதன்போது ''சிசு செரிய'' செயற்றிட்டத்தின் கீழ் குறைந்த பட்சம் 42 ஆசனங்களைக் கொண்ட பேருந்துகளை ஈடுபடுத்துவது காட்டாயமாவதுடன், சாதாரண பேருந்துககட்டணத்தின் 50% வீதம்மாணவர்களிடமிருந்து அறவிடப்படுவதுடன், இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான மற்றும் தனியார் துறையினருக்குச் சொந்தமான பேருந்துகள் மூலம் சேவைகள் பெற்றுக் கொள்ளப்படும். இதன்போது, பேருந்து இயக்குனர்களின் இழக்கும் வருமானத்தின் பொருட்டு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு ஏற்கனவெ இணங்கப்பட்ட கட்டண அளவின் படி பின்னர் மீள்நிரப்பி சேவைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு பொதுத் திறைசேரியினால் பணத்தொகை ஒதுக்கப்படும். தற்போது 'சிசு செரிய' செயற்றிட்டத்தின் கீழ் ஈடுபடுத்தப்பட்டுள்ள 1419 பேருந்துகளின் காரணமாக (15 ஆசனங்கள் அளவிலான) ஏறக்குறைய 6500 இற்கும் அதிகமான பாடசாலை வேன் வண்டிகள் நகரத்திற்குள் வருவது தவிர்க்கப்பட்டுள்ளதுடன், 100,000இற்கும் அதிக எண்ணிக்கையிலான பாடசாலைச் சிறார்கள் சேவையினைப் பெற்றுக் கொள்கின்றனர்.

2019ஆம் ஆண்டில் புதிய 56 'சிசு செரிய' சேவைகள் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டுள்ளதுடன், 2019.12.31ஆந் திகதியாகையில் மொத்த சேவைகளின் எண்ணிக்கை கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

மாகாணம்	சிசு செரிய பேருந்துச் சேவைகளின் எண்ணிக்கை
மேல்	422
தென்	104
வடமேல்	298
வடமத்திய	163
சப்பிரகமுவா	122
ஊவா	100
கிழக்கு	117
மத்திய	51
வட	36
மாகாணங்களுக்கு இடையில்	7
மொத்தம்	**1419**

மூலம்- திட்டமிடல் திணைக்களம், தேபோஆ

'சிசு செரிய' சேவை உரிய முறையில் மேற்கொள்ளப்படுகின்றனவா என அடிக்கடி பரிசீலனை செய்யப்படுவதுடன் ஒப்பந்த நிபந்தனைகளை மீறுதல், அறிவிக்காமல் சேவையிலிருந்து விலகுதல் ஆகிய காரணங்களால் 55 பேருந்துச் சேவைகள் 2019ஆம் ஆண்டினுள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

2019 ஆம் ஆண்டினுள் சிசு செரிய சேவை வழங்கல் தொடர்பில் செலவிடப்பட்ட தொகை 564.72 மில்லியன் ரூபா ஆகும்.

1.2 கிராமிய பேருந்துச் சேவைச் செயற்றிட்டம் -"கெமி செரிய"



"கெமி செரிய" கிராமிய பேருந்துச் சேவை

போக்குவரத்து வசதிகளற்ற, நகரத்தை விட்டும் தூரத்தில் உள்ள, கிராமப்புறத்தில் வாழும் மக்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக 2005ஆம் ஆண்டில் 'கெமி செரிய' செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தற்போதாகையில் போக்கவுரத்து வசதிகளற்ற அன்றாட தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கேனும் முடியாத பின்னணியில் அதன் அவசியத்தினை

இனங்கண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழு 'கெமி செரிய' செயற்றிட்டத்தினை 2019ஆம் ஆண்டினுள் மென்மேலும் விஸ்தரித்து 11 புதிய சேவைகளை ஆரம்பித்துள்ளது. இப்பேருந்துச் சேவை ஏனைய பொதுப் பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் செயற்படுத்தப்படாத பாதைகளுக்காக மாத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், ஆரம்பத்தில் இருந்து 03 வருடங்கள் வரை பேருந்து இயக்குனர்களுக்கு உதவித்தொகை ஒன்று செலுத்தப்படும். ஆரம்பத்தில் இருந்து இது வரை அவ்வாறு அறிமுகப்படுத்தப்பட்ட புதிய 'கெமி செரிய' சேவைகளின் எண்ணிக்கை 70ஐ விட அதிகமாகும். இது வரையில் உதவித் தொகையினைப் பெறும் சேவைகளின் எண்ணிக்கை 15 ஆவதுடன், புதிய சேவைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. செயற்றிட்டத்திற்கு தனியார் துறையின் ஓட்டுனர்கள் மாத்திரம் ஈடுபடுத்தப்படுவதுடன், திறந்த கேள்வி கோரல் முறைமையின் கீழ் ஓட்டுனர்கள் தெரிவு செய்யப்படுவர்.

2019ஆம் ஆண்டினுள் 11 புதிய சேவைகள் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டுள்ளதுடன் 2019.12.31ஆந் திகதியில் மொத்த 'கெமி செரிய' சேவைகளின் எண்ணிக்கை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

மாகாணம்	கெமி செரிய பேருந்துகளின் எண்ணிக்கை
மத்திய	01
கிழக்கு	10
வடமேல்	04
மொத்தம்	**15**

மூலம்- திட்டமிடல் திணைக்களம், தேபோஆ

2017 ஆம் ஆண்டினுள் உதவித் தொகையினைப் பெற்று செயற்படும் மூன்று ஆண்டுகள் முடிவுற்றமையால் நிபந்தனையின் பிரகாரம் விலகிச் சென்ற சேவைகளின் எண்ணிக்கை 02 ஆவதுடன், 2019.1.2.31ஆந் திகதியில் 'கெமி செரிய' சேவை வழங்கல் தொடர்பில் செலவிடப்பட்ட தொகை 2.66 மில்லியன் ரூபா ஆகும்.

1.3 இரவு நேர பேருந்து சேவை செயற்றிட்டம் - "நிசி செரிய"

இரவு வேளைகளில் மற்றும் அத்காலை வேளைகளில் பேருந்துச் சேவைகள் தொடர்ச்சியாக செயற்படாத, இலங்கையின் பல பிரதேசங்களில் உள்ள பொது மக்களுக்கு தொழில் மற்றும் கல்வி நடவடிக்கைகளுக்காக நேரகாலத்துடன் உரிய இடங்களுக்கு செல்ல முடியாமையினால் பெரும் அவஸ்தைக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது. பிரதான பாதைகள் தவிர்ந்த பல உட்பாதைகளில் ஏற்பட்டுள்ள இக்கவலைக்கிடமான நிலைமையினைப் புரிந்து கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அதற்றுத் தீர்வாக 'நிசி செரிய' செயற்றிட்டத்தினை ஆரம்பித்தது.

அதிகாலை மற்றம் இரவுப் பயணமுறைகளின் போது பேருந்துகளின் இயக்கத்தின் மூலம் போதியளவு வருமானமொன்று கிடைக்காமலிருப்பினும் போக்குவரத்துச் சேவை கிடைக்காமை காரணத்தால் பயணிக்கும் மக்கள் முகங் கொடுக்கும் கடும் நெருக்கடிகளைக் குறைத்தல் இச்செயற்றிட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.



'நிசி செரிய' இரவுப் பேருந்துச் சேவை

'நிசி செரிய' செயற்றிட்டத்தின் அடிப்படை நோக்கானது இரவு 8.00 மணிக்கு பிறகு கடைசி பயணமுறை மற்றும் மறுநாள் அதிகாலையில் முதல் பயணமுறைக்காகப் பொதுப் பேருந்துச் சேவையினை ஈடுபடுத்தி பயணிகளின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றிக் கொடுத்தலாகும். போக்குவரத்துச் சிக்கல்கள் உள்ள பிரதேசங்களில் பயணிக்கும் மக்களுக்கு இச்சேவைக் கிடைக்கின்றமை பெரும் ஆறுதலாக இருப்பதுடன், நம்பிக்கைமிகு சேவையொன்றினை நிலைநிறுத்துவதற்காகவும் கண்காணிப்பு நடவடிக்கைகளை எளிதாக்குவதற்காகவும் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குரிய பேருந்துகள் மாத்திரம் ஈடுபடுத்தப்படுகின்றன. 2019ஆம் ஆண்டில் 06 புதிய சேவைகள் மாத்திரம் செயற்படுத்தப்பட்டதுடன், 2019.12.31ஆந் திகதியாகையில் செயற்பாட்டிலுள்ள மொத்த 'நிசி செரிய' சேவைகளின் எண்ணிக்கை கீழ்வருமாறு.

மாகாணம்	நிசி செரிய பேருந்துச் சேவைகளின் எண்ணிக்கை
மேல்	62
தென்	33
வடமேல்	20
வடமத்திய	11
மத்திய	28
சப்பிரகமுவா	08
ஊவா	09
கிழக்கு	03
வடக்கு	05
மொத்தம்	**179**

மூலம்- திட்டமிடல் திணைக்களம் தேபோஆ

தற்போது நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் 'நிசி செரிய' பேருந்துச் சேவை செயற்படுத்தப்படுவதுடன் பலரின் பாராட்டுதல்களுக்கு உள்ளாகும் காலத்தின் தேவையான சமூக சேவையாக உள்ளது. ஏதிர்வரும் காலத்தில் இச்சேவையினை மென்மேலும் விஸ்தரிப்பதற்கு ஏற்கனவே இலங்கைப் போக்குவரத்துச் சபை இணக்கம் தெரிவித்துள்ளது. பேற்றுக் கொடுக்கும் சேவையின் தரத்தினைப் பாதுகாப்பதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நடமாடும் பரிசோதனை அதிகாரிகளை ஈடுபடுத்தப்பட்டு, அடிக்கடி அப்பேருந்துச் சேவைகளைப் பரிசோதனை செய்யப்பட்டு கடும் அர்ப்பணிப்புடன் செயற்படுத்தப்படுகின்றது.

2019ஆம் ஆண்டின் போது 'நிசி செரிய' பேருந்துச சேவைக்காக செலவிடப்பட்ட தொகை 14.37 மி. ரூபாவாகும்.

2. பேருந்து ஊழியர் குழுவினரை பதிவுசெய்தலும் பயிற்சி அளித்தலும்

மாகாணங்களுக்கு இடையிலான பயணிகள் போக்குவரத்துச் சேவையினைப் பயன்படுத்தும் பயணிகளுக்கு வினைத்திறன் மிக்க, விளைபயனுள்ள மற்றும் தரமிக்க உயர் சேவையினை வழங்கும் நோக்கினை நிறைவேற்றிக் கொள்வதற்காக 2006ஆம் ஆண்டு முதல் இது வரையில் தொடர்ச்சியாக சாரதிகள், பேருந்து நடத்துனர்கள் பயிற்சி நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பயிற்சி நிகழ்ச்சிகள் கோட்பாட்டு மற்றும் பிரயோகச் செயற்பாடுகள் ஊடாக மேற்கொள்ளப்படுவதுடன், இலங்கை போக்குவரத்துச் சபையினால் பிரயோகப் பயிற்சி நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வாறே, வீதிப் பாதுகாப்பு, பொதுமக்கள் உறவினைப் பேணுதல், நேர்மறைமிக்க சிந்தனை போன்ற விரிவுரைத் தலைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு நாட்டின் அனுபவமிக்க போதனாசிரியர்களால் கோட்பாட்டு அறிவு வழங்கப்படுகின்றது. இச்செயற்பாடு தொடர்ந்தும் ஒவ்வொரு வருடமும மேற்கொள்ளப்படுவதுடன், 2019ஆம் ஆண்டில் பயிற்றுவிக்கப்பட்ட சாரதிகள், பேருந்து நடத்துனர்களின் விபரம் பின்வருமாறு.


2019ஆம் ஆண்டில் புதிய 984 சாரதிகளும் 1222 நடத்துனர்களும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவில் மாகாணங்களுக்கு இடையிலான பயணிகள் போக்குவரத்துச் சேவைக்கான பயிற்சி பெற்று அடையாள அட்டைகளையும் பெற்றுக்கொண்டனர்.

இதன் மூலம் புதிய 984 சாரதிகளும் 1222 நடத்துனர்களும் பயிற்றுவிக்கப்பட்டுள்ளதுடன், 123 பேருக்கு மீண்டும் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. மேலும், சாரதிகள் நடத்துனர்கள் 1935 பேருக்கு இற்றைப்படுத்துவதற்கான பயிற்சி வழங்கப்பட்டு அடையாள இடைகள் இற்றைப்படுத்தப்பட்டுள்ளன.


மாதம்	2019ஆண்டினுள் பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை					
	புதிய		புதுப்பிப்பித்தல்		மீளப் பயிற்சி	
	சாரதிகள்	நடத்துனர்கள்	சாரதிகள்	நடத்துனர்கள்	சாரதிகள்	நடத்துனர்கள்
ஜனவரி	98	81	80	88	0	0
பெப்ரவரி	76	61	74	86	0	0
மார்ச்	117	90	75	109	0	01
ஏப்பிரல்	46	47	41	54	0	0
மே	83	70	51	80	03	05
ஜூன்	103	86	75	74	10	06
ஜூலை	127	103	84	101	10	08
ஆகஸ்ட்	97	74	88	88	06	10
செப்தெம்பர்	118	91	85	91	06	09
ஒக்தோபர்	137	110	94	108	09	10
நவம்பர்	116	80	66	72	04	05
திசெம்பர்	104	91	68	103	09	12
மொத்தம்	**1222**	**984**	**881**	**1054**	**57**	**66**

மூலம்- தரப்பாதுகாப்புத் திணைக்களம், தேபோஆ


புதிய சாரதிகள்/நடத்துனர்கள் பயிற்சிப் பாடநெறி -2019



புதுப்பித்தல் சாரதிகள்/நடத்துனர்கள் பயிற்சிப் பாடநெறி -2019



அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறுவதால் மீண்டும் பயிற்சிப் பாடநெறி - 2019



பயிற்சிப் பாடநெறி நிகழ்ச்சிகள் - 2019






2019ஆம் ஆண்டில் 2820 சாரதிகள்/ நடத்துனரகள் 44 பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.

2019 திசெம்பர் 31ஆந் திகதியில் செயற்றிட்டத்திற்கான திரண்ட செலவு 5.492 மி.ரூபா ஆகும்.

3. தூரப் பயணச் சேவை சமிக்ஞைப் பலகைகள்



தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களின் கீழ் இயங்கும் தூரப் பயண பேருந்துகளையும் மற்றும் மாகாணப் போக்குவரத்து அதிகார சபைகளின் பயணிகள் சேவை அனுமதிபபத்திரங்களின் கீழ் இயங்கும் தூரப் பயண பேருந்துகளையும் குறிப்பிட்ட நேரத்திற்குள் தமது முடிவிடத்தை அடையச் செய்வதன் மூலம் தூரச் சேவைகளின் தரத்தினை விருத்தி செய்யும் நோக்கில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் தூரப் பயனச் சேவை பேருந்துகளுக்காக மட்டுப்படுத்தப்பட்ட நிறுத்தும் இடங்களை அறிமுகப்படுத்தும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம் தூரப் பயண பேருந்துகளினால் குறுகிய தூர பேருந்துகளின் வருமானத்திற்கு ஏற்படும் பாதிப்பினைக் குறைப்பதுவே அடிப்படை நோக்கமாகும்.

2019.06.18ஆந் திகிதியிட்ட இல 2128/9 கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் இந்த புதிய சமிக்ஞை பிரபலப்படுத்தப்பட்டது.

2019ஆம் ஆண்டு இறுதியாகையில், கொழும்பு முதல் கதிர்காமம் வரை இச்சமிக்ஞைப் பலகைகள் நிறுவப்பட வேண்டிய இடங்கள் ஏற்கனவே இனங்காணப்பட்டுள்ளதுடன், அதற்கு மாகாணப் போக்குவரத்து அதிகார சபையினதும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினதும் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது.

2019.12.31ஆந் திகதியில் செயற்றிட்டத்திற்காக 0.034 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

4. நேர அட்டவணைகளைத் தயாரித்தல் மற்றும் திருத்தி அமைத்தல்

நாடு முழுதும் மாகாணங்களுக்கு இடையில் பொதுப் பயணிகள் போக்குவரத்துப் பேருந்துச் சேவையினை வழங்கும் எல்லா பேருந்து ஓட்டுனர்களுக்கும் சம சந்தர்ப்பத்தினை வழங்கும் விதத்தில் பயண நேர அட்டவணைகளைத் தயாரித்தலும் அரச மற்றும் தனியார் பிரிவின் பேருந்து ஓட்டுனர்களுக்கு இடையிலான பாதகமான போட்டித் தன்மையினைக் குறைத்தலும் அதன் மூலம் ஓட்டுனர்களின் வியாபார நிலைப்பாட்டினைப் பாதுகாப்பதும் பயணிக்கும் மக்களுக்கு நம்பகமானதும் பாதுகாப்பானதுமான உயர் தரமிக்க பொதுப் பேருந்துச் சேவையினை வழங்குவதும் இச்செயற்றிட்டத்தின் அடிப்படை நோக்கங்களாகும். இதற்கு மேலதிகமாக, பேருந்து ஒன்று சாதாரணமாக ஒரு நாளைக்கு ஓடும் கிலோ மீற்றர் அளவினைஉச்சப்படுத்துதல் இச்செயற்றிட்டத்தினால் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களில் முக்கியமானதாகும்.

இபோச மற்றும் தனியார் பேருந்துகளுக்கான ஒன்றிணைந்த நேர அட்டவணைகளைத் தயாரிப்பதற்காக 2019ஆம் ஆண்டின் போது பெரும் முயற்சி செய்திடினும், இலங்கைப் போக்குவரத்துச் சபையிடமிருந்து போதியளவு பங்களிப்பு கிடைக்காமை, ஒன்றிணைந்த நேர அட்டவணைகளைச் செயற்படுத்துவதற்கு பொது பேருந்துத் தரிப்பிட வசதிகள் இல்லாமை என்பன இச்செயற்றிட்டம் வெற்றிபெறுவது குறைவடைவதற்கு ஏதுவாகின்றன. அதனால் இபோச ஒன்றிணைந்த நேர அட்டவணைகளின் படி பேருந்துகள் பயணிப்பதற்கு இணங்கும் வரையில் தனியார் பேருந்துகளுக்காக மாத்திரம் சுழல்முறை நேர அட்டவணைகளைத் தயாரித்தல் மற்றும் திருத்தியமைத்தல் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

2019.12.31 ஆந் திகதி வரையில் இதற்காக மேற்கொள்ளப்படட் செலவு 0.273 மி. ரூபா ஆகும்.

5. பேருந்துக் கட்டண ஒழுங்கீனங்களை நீக்குதல்

2002 ஆம் ஆண்டில் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட பேருந்துக் கட்டணக் கொள்கையின் பிரகாரமே பொதுப் பயணிகள் போக்குவரத்து பேருந்துகளில் கட்டணங்களை நிர்ணயித்தல் மேற்கொள்ளப்படுகின்றது. இக்கட்டணக் கொள்கையின் படி ஒவ்வொரு வருடமும் ஜூலை மாதம் 01ஆந் திகதியன்று பேருந்துக் கட்டணத் திருத்தியமைத்தல் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், எரிபொருள் விலை, மொத்த 01 கி.மீஇன் ஆகுசெலவு 4% அல்லது அதற்கு மேல் அதிகரிக்கும் சந்தர்ப்பத்தில் மாகாணத்திற்குள்ளேயான பேருந்துக் கட்டணம் திருத்தி அமைக்கப்படும்.

இக்கட்டணக் கொள்கையினை இற்றைப்படுத்துவதற்காக ஏற்கனவே தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நடவடிக்கை எடுத்தபடி உள்ளதுடன், அதற்கு அவசியமான (GPS Based mobile App) மொறட்டுவைப பல்கலைக்கழகத்துடன் 2019.09.17ஆந் திகதி கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்டது. அந்த GPS Based mobile Appஇனைப் பயன்படுத்தி 100 பேருந்துப் பாதைகளுக்கான ஆய்வு 2020 ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் ஆரம்பிப்பதற்கு உள்ளதுடன், மாகாண உத்தியோகத்தர்களைப் பயிற்றுவித்தல் 2019 திசெம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்டது.

மொத்த 01 கி.மீ.இற்கான ஆகுசெலவு குறிப்பிடத்தக்களவு மட்டத்தினால் மாற்றமடையாமையால், வருடாந்த பேருந்துக் கட்டணத் திருத்தம் 2019ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்படாததுடன், இச்செயற்றிட்டத்திற்காக 2019.12.31ஆந் திகதியாகையில் 0.135 மில்லியன் ரூபா தொகை செலவிடப்பட்டுள்ளது.

6. போக்குவரத்துடன் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சி

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் பிரகாரம் போக்குவரத்து முறைப்படுத்தும் அதிகாரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்குச் சாட்டப்பட்டுள்ளது. அதன் படி, போக்குவரத்துத் துறையுடன் சம்பந்தப்பட்ட தரப்பினரான பேருந்து உரிமையாளர்கள், போக்குவரத்து தொடர்பிலான அலுவலர்கள், பாடசாலைச் சிறார்கள், பயணிகள் ஆகியோரை விழிப்பூட்டல் இச்செயற்றிட்டத்தின் நோக்கமாகும்.

i) போக்குவரத்துடன் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கான விழிப்பூட்டல் செயற்றிட்டத்தின் கீழ் பேருந்து உரிமையாளர்களை அறிவுறுத்தும் செயலமர்வு

பயணிகள் சேவை அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுள்ள பேருந்து உரிமையாளர்களுக்கும் மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கும் இடையில் நிரந்தரமான ஒத்துழைப்பினை பேண வேண்டியுள்ளயதால் மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் அவ்வப்போது அமுல்படுத்தப்படும் விதிக்கப்படும் சட்டதிட்டங்கள் குறித்து பேருந்து உரிமையாளர்களை அறிவுறுத்துவதறகாக செயலமர்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டதுடன் அவற்றுள் 07 மாகாணங்களில் கடந்த ஆண்டு நடாத்தப்பட்டதுடன், தென் மற்றும் மத்திய மாகாணங்களுக்கான 02 செயலமர்வுகள் இவ்வருடத்தில் நடாத்தப்பட்டன.





ii)போக்குவரத்துடன் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கான விழிப்பூட்டல் செயற்றிட்டத்தின் கீழ் போக்குவரத்து தொடர்பிலான உயர் அதிகாரிகளுடன் பொதுப் போக்குவரத்துத் துறையிலுள்ள பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடும் செயலமர்வு

பொதுப் போக்குவரத்துத் துறையில் காணப்படும் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடுவதற்கு கௌரவ போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரின் தலைமையில் இச் செயலமர்வு ஒழுங்குசெய்யப்பட்டது. பொதுப் போக்குவரத்துத் துறையில் உள்ள பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதே இதன் நோக்கமாகும். இக்கலந்துரையாடலுக்காக கௌரவ அமைச்சர்களும், போக்குவரத்து அமைச்சு செயலாளரும், போக்குவரத்து இராஜாங்க செயலாளரும், மாகாணப் போக்குவரத்து செயலாளர்களும், வீதிப் பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் அதகார சபைகளிலுள்ள தலைவர்கள் மற்றும் பொது முகாமையாளர்களும், போக்குவரத்து அமைச்சு அதிகாரிகள் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரிகள் உட்பட போக்குவரத்துத் துறையின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.





iii) போக்குவரத்துடன் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கான விழிப்பூட்டல் செயற்றிட்டத்தின் கீழ் பொதுப் போக்குவரத்து பேருந்துகளுக்கான ஒலி,ஒளி இறுவட்டுக்களைப் பகிர்ந்தளித்தல்

பொதுப் பயணிகள் போக்குவரத்து பேருந்துகளில் பயணிக்கும் பயணிகளுக்கு ஆரவாரமிகு இசைகளற்ற பாடல்கள் மற்றும் காணொளிகள் இரசனைக்காக ஒலி, ஒளி ஒருங்கிணைப்புடன் கூடிய இறுவட்டுக்கள் கௌரவ போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர அவர்களின் தலைமையில் மாகும்புர பன்னோக்குப் போக்குவரத்து மத்திய நிலையத்தில் வெளியிடப்பட்டன.

இப்பாடல் இறுவட்டுக்கள் மாகாணப் போக்குவரத்து அதிகார சபைகளுக்கும் இபோச பேருந்துகளுக்கும் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவ்விறுவட்டுக்கள் வெறுமனே பாடல்களுக்கு மாத்திரம் வரையறுக்காது சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, சுகாதார அமைச்சு, சுற்றாடல் அமைச்சு போன்ற அரச நிறுவனங்களால் பொது மக்களுக்கு வழங்குவதற்கு தயார்செய்து வைத்திருந்த செய்திகள் உள்ளடங்கிய காணொளிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. துரமிக்க பயணிகள் போக்குவரத்துச் சேவையொன்று தொடர்பிலும் சமூக, சுகாதார மற்றும் இயற்கை அழகியல் தொடர்பிலும் பொது மக்களில் நேர்மறையான மனப்பாங்கு மாற்றத்தினை ஏற்படுத்த இச்செயற்றிட்டத்தின் ஊடாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு செயற்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் பயணிக்கும் மக்களின் பாராட்டுதல்களும் பெருமளவில் கிடைத்த வண்ணம் உள்ளன.



iv) போக்குவரத்துடன் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கான விழிப்பூட்டல் செயற்றிட்டத்தின் கீழ் நடமாடும் சேவை நிகழ்ச்சி

போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் கீழ் செயற்படும் நிறுவனங்களினால் ஒழுங்குசெய்யப்படும் பொதுச் சேவைகளை பொதுமக்களுக்கு மிகவும் சமீபமாகவும் நேயமிக்கதாகவும் மேற்கொள்வதற்கு நடமாடும் சேவை நிகழ்ச்சியொன்று கம்பஹ சங்கபோதி வித்தியாலயத்தில் நடாத்தப்பட்டது.




v) போக்குவரத்துடன் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கான விழிப்பூட்டல் செயற்றிட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களை அறிவூட்டும் செயலமர்வுகள்

வீதி விபத்துக்களினால் காயப்படும் மற்றும் விபத்துக்குள்ளாகும் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதி உயர் பெறுமானத்தை அடைவதைத் தவிர்த்தல் குறித்து அறிவூட்டும் நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்போது, வருமுன் காப்பதே சிறந்தது என்ற தொனிப்பொருளில் பாடசாலை சிறார்களை இலக்காகக் கொண்டு இவ்வீதிப் பாதுகாப்பு குறித்து விரிவுரைத் தொடர்கள் நாட்டில் பல்வேறு மாகாணங்களை உள்ளடக்கும் வகையில் ஒழுங்குசெய்யப்பட்டன.

2019ஆம் ஆண்டில் செயற்படு திட்டத்தின் பிரகாரம் பாடசாலை வாகனக் கட்டுப்பாட்டுப் பிளைகளைப் பயிற்றுவிக்கும் 15 செயலமர்வுகள் நடாத்தப்பட திட்டமிட்டிருப்பினும், நாட்டில் ஏற்பட்ட அவசரகால நிலைமை காரணமாக செயலமர்வு எண்ணிக்கையினை 09 வரை குறைக்க நேரிட்டது. இச்செயலமர்வுகளை நடாத்துவதற்கு ஜனாதிபதி செயலகத்தினாலும் நிதி ஏற்பாடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. ஆதன் பிரகாரம், மொணறாகலை, பிபில, கொழும்பு, பஸ்ஸர, பண்டாரவளை, புத்தளம், மாத்தளை, கம்பொல, நுவரெலியா ஆகிய இடங்களில் நடாத்தப்படடன. இச்செயலமர்வுகளின் போது ஏறத்தாழ 5000 வாகனக் கட்டுப்பாட்டுப் பிள்ளைகள் பயிற்றுவிக்கப்பட்டதுடன், எல்லா பாடசாலைகளுக்கும் ஒரு வாகனக் கட்டுப்பாட்டுக் கருவித் தொகுதி வீதம் அன்பளிப்புச் செய்யப்பட்டது. அவ்வன்பளிப்பிற்காகப் பெயா பஸ்ட் நிறுவனம் அனுசரணை வழங்கியது.








இதற்கு மேலதிகமாக, திசெம்பர் மாதம் சப்பிரகமுவா மாகாணத்தில் பாடசாலைகளை பிரதிநிதித்துவப்படுத்தி சித்திரப் போட்டியொன்றும் நடாத்தப்பட்டது. அச்சித்திரப் போட்டியில் வெற்றி பெற்ற 201 வெற்றியாளர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இச்சித்திரப் போட்டிக்கு விஜய பத்திரிகை நிறுவனம் அனுசரணை வழங்கியதுடன், கல்வி அமைச்சின் முழு ஒத்துழைப்புடன் தீர்ப்புகள் வழங்கப்பட்டன.




2019ஆம் ஆண்டினுள் இதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு 4.734 மில்லியன் ரூபாவாகும்.

7. உள்ளகத் தகவல்கள் தொழில்நுட்பத் தொகுதி

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பிரதான மற்றும் உப அலுவலகக் கணினி வலையமைப்பை சிறந்த மட்டத்தில் பேணுதல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதுடன், காலாவதியாகிய கணினிகள் மற்றும் அச்சு இயந்திரங்களுக்கு புதிய கணினிகளையும் பன்முகச் செயற்பாடுகள் கொண்ட பிரதியிடல் இயந்திரங்களையும் பயன்படுத்தவதற்கு நேரிட்டது.

மேலும், எல்லா செயற்பாடுகளையும் இனங்கண்டு அச்செயற்பாடுகள் ஒன்றையொன்று இணையுமாறு மையப்படுத்தப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்ட தொகுதியொன்றினை அமைக்கும் நோக்கில் நிறுவனத்தின் அனைத்து செயற்பாட்டினையும் தானியங்கச் செய்யும் தொகுதியொன்றினை நிறுவுதலை (Process Automation System) ICTA நிறுவனம், மொறட்டுவைப் பல்கலைக்கழகம் மற்றும் கொழும்புப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் அறுவுத்தல்களின் கீழ் பல் கட்டங்களில் முன்னெடுத்துச் செல்லும் வகையில் அரம்பிக்கப்பட்டு 2019ஆம் ஆண்டின் போது அதன் முதல் கட்டத்தினையும் இரண்டாவது கட்டத்தினையும்

வெற்றிகரமாக நிறைவு செய்து அதன் இறுதிக் கட்டத்தின் 80%இனையும் வெற்றிகரமாக முடித்து அதன் நேரலைச் செயற்பாட்டு நடவடிக்கைகள் (Live Operation) மேற்கொள்ளப்பட்டுள்ளன.


அவ்வாறே, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வலைத்தளத்தில் காணப்படும் தகவல்களை இற்றைப்படுத்தல் மற்றும் புதிய தகவல்களை உட்புகுத்துதலையும் தேடுதலையும் எளிதாக்கும் முறைமைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், பேருந்துக் கட்டணம் குறித்து தரவுகள், மாகாணங்களுக்கு இடையிலான பேருந்து நேர அட்டவணைகள், மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துகளின் இயங்கும் பாதைகளின் வரைபடங்கள், பயணிகள் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரம் தொடர்பில் கேள்விமனு குறித்து தகவல்கள் உட்பட்டவற்றை வலைத்தளத்தினூடாக எளிதாகப் பெற்றுக் கொள்ளும் வகையில் வலைத்தளத்தை மேலும் முன்னேற்றுதல் என்பன புதிய அணுகுமுறைகளுடன் புது விதத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அவ்வாறே, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வலைத்தளத்தில் காணப்படும் தகவல்களை இற்றைப்படுத்தல் மற்றும் புதிய தகவல்களை உட்புகுத்துதலையும் தேடுதலையும் எளிதாக்கும் முறைமைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், பேருந்துக் கட்டணம் குறித்து தரவுகள், மாகாணங்களுக்கு இடையிலான பேருந்து நேர அட்டவணைகள், மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துகளின் இயங்கும் பாதைகளின் வரைபடங்கள், பயணிகள் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரம் தொடர்பில் கேள்விமனு குறித்து தகவல்கள் உட்பட்டவற்றை வலைத்தளத்தினூடாக எளிதாகப் பெற்றுக் கொள்ளும் வகையில் வலைத்தளத்தை மேலும் முன்னேற்றுதல் என்பன புதிய அணுகுமுறைகளுடன் புது விதத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.


பெஸ்ரியன் மாவத்தை பேருந்துத் தரிப்பிட வளவில் பொருத்தப்பட்டுள்ள CCTV கெமரா தொகுதி உரிய விதத்தில் செயற்படாமையால், அதற்கான புதிய தொழில்நுட்பத்தைக் கொண்ட CCTV கெமரா தொகுதி ஒன்று குறிப்பிட்ட பேருந்துத் தரிப்பிடத்தினை உள்ளடக்குமாறு மற்றும் வவுனியா பேருந்துத் தரிப்பிடத்தினையும் உள்ளடக்குமாறு பொருத்தப்படுவது வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. மேலும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைமை அலுவலக வளாகத்திலும் CCTV கெமரா தொகுதி ஒன்று பொருத்தப்பட்டு உள்ளதுடன் மேற்படி தொகுதிகள் தலைமை அலுவலகத்தின் ஊடாகக் கண்காணிப்புச் செய்யப்படும்.

இதற்கு மேலதிகமாக, பயணிக்கும் மக்களுக்கு தரமிக்க போக்குவரத்துச் சேவையொன்றினை வழங்கும் நோக்கில் இணையத்தளத்தினூடாக (இடையறா) ஆசனங்களை முன்பதிவுசெய்தல் செயற்றிட்டமொன்று (Online Bus Ticket Reservation System) மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின்

மூலம் உரிய மென்பொருள் விருத்தி செய்யப்பட்டு ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், அதனை கைத்தொலைபேசி ஊடாக எள்தாகச் சேவையினைப் பெற்றுக் கொள்ளும் வகையில் மென்பொருளொனறையும் கொடுப்பனவுகளை மேற்கொள்ளக் கூடிய ஊடகங்களையும் மேலும் விருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.



நவீன தொழில்நுட்பத்தின் பிரதிபலனாக பயணிக்கும் மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு கூகுள் வரைபடம் (Google map) ஊடாக கூகுள் டிரான்சிட் (Google transit) சேவையினை மொறட்டுவைப் பல்கலைக்கழகத்துடன் ஒருங்கிணைந்து அறிமுகப்படுத்தியதுடன், அதன் மூலம் பொதுப் போக்குவரத்துச் சேவைகளின் பயணத் தடவைகள் மற்றும் பாதைகளின் தரவுகள் ஆகியவற்றை இச்சேவையினூடாக எளிதாகப் பெற்றுக்கொள்ளும் இயலுமையை வழங்கியுள்ளது.



தகவல் தொழில்நுட்பத்தின் ஊடாக பொதுமக்களுக்கு பெற்றுக் கொடுக்கும் பொதுச் சேவைகள் குறித்து 2019ஆம் ஆண்டில் இ-சுவாபிமானி (e-Swabhimani) விருது விழாவில் அரச துறைக்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் இடையறா ஆசன முன்பதிவுச் செயற்றிட்டத்திற்காக சிறப்பு விருதொன்றும் கூகுள் டிரான்சிட் டேட்டா ஸ்பெசிபிகேஷன் (Google Transit Data Specification) செயற்றிட்டத்திற்காக விருதொன்றும் என இரு விருதுகள் சுவீகரிக்கப்பட்டன.





செயற்றிட்டத்திற்கான 2019.12.31.ஆந் திகதியில் திரண்ட செலவு 31.117 மில்லியன் ரூபாவாகும்.

8. போக்குவரத்துக் கேள்வி மற்றும் சேவை தர ஆய்வு

இதன் கீழ், பிரதானமாக மாகாணங்களுக்கு இடையிலான பேருந்து இயக்கத்திற்கு மற்றும் ஏனைய பேருந்துச் சேவை செயற்றிட்டங்களை விஸ்தரிப்பதற்கு உரிய பயணிகள் கேள்வி ஆய்வு மேற்கொள்ளப்படும். அதன் மூலம் வழங்கப்படும் சரியான தரவுகள் முறையான அட்டவணைகளைத் தயாரிப்பதற்கும் எழும் பிரச்சினைகளைத் குறைத்துக் கொள்வதற்கும் மிகவும் பயனுள்ளதாக அமையும். இதற்கு மேலதிகமாக மாகாணங்களுக்கு இடையிலான பயணிகள் போக்குவரத்து தொடர்பில் முக்கியமான தீர்மானங்களை எடுக்கும் போது, கொள்கைகளைத் தயாரிக்கும் போது, திட்டங்களைத் தீட்டும் போது காணப்படும் நிலைமையினை ஆராய்தல் முதலில் நடைபெறும். தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் செயற்படுத்தப்படும் சிசுசெரிய, கெமி செரிய மற்றும் நிசி செரிய செயற்றிட்டங்கள் குறித்து தரவுகளைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பங்களின் போதும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். அதன் படி பொதுப் போக்குவரத்துச் சேவைகளைப் பயன்படுத்துவோர் மற்றும் பேருந்து ஓட்டுனர்கள் ஆகிய இரு தரப்பினர்களுக்கும் நியாயமான முறையில் கேள்வி மற்றும் நிரம்பலை மிகச் சிறப்பாகக் கையாள்வதற்கு தேவையான வழிமுறைகளை மேற்கொள்வதற்கும் உரிய தரவுகள் முக்கிய காரணியாக அமைந்துள்ளன.

2019ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில்,தெற்கு அதிவேகப் பாதையில் மற்றும் வெளிப்புற சுற்றுப் பாதையில் செய்த ஆய்வு விசேடமாவதுடன், அதிவேகப் பாதையினூடாகப் பயணிக்கும் அதி சொகுசு பேருந்துச் சேவையினை பயணிகளின் கேள்விக்கேற்ப வழங்குவதற்கும் வழிகோலியது. இதற்கு மேலதிகாக கண்டி – கொழும்பு, காலி – கொழும்பு ஆகிய பிரதான பாதைகளில் செயற்படுத்தப்படும் பேருந்துச் சேவைகள் தொடர்பில் கூடிய கவனஞ் செலுத்தி 2019ஆம் ஆண்டினுள் இப்பிரிவினால் 26 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

செயற்றிட்டத்திற்காக 2019ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மொத்தச் செலவு 2.754 மில்லியன் ரூபாவாகும்.

9. பொதுப் போக்குவரத்திற்காக ஜீ.பீ.எஸ். (GPS) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்



ஜீ.பீ.எஸ். நெறியாள்கை

பொதுப் போக்குவரத்துச் சேவையில் எழும் சவால்மிக்க பிரச்சினைகளைத் தீர்ப்பதனை அடிப்படையாகக் கொண்டு தரமிக்க மற்றும் பாதுகாப்புமிக்க பொதுப் போக்குவரத்துச் சேவையொன்றினை நிலைநிறுத்துவதற்காக தொடர்பாடல் தொழில்நுட்பத்தினைப் பொதுப் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுத்தும் வகையில் ஜீ.பீ.எஸ். தொழில்நுட்பம் (GPS Technology) மற்றும் ஏனைய தொழில்நுட்ப நுணுக்கங்களைப் பிரயோகித்து மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துகளை நெறிப்படுத்துதல் முதன்முதலாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் ஆரம்பிக்கப்பட்டது.

பொதுப் போக்குவரத்துச் சேவையில் எழும் சவால்மிக்க பிரச்சினைகளைத் தீர்ப்பதனை அடிப்படையாகக் கொண்டு தரமிக்க மற்றும் பாதுகாப்புமிக்க பொதுப் போக்குவரத்துச் சேவையொன்றினை நிலைநிறுத்துவதற்காக தொடர்பாடல் தொழில்நுட்பத்தினைப் பொதுப் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுத்தும் வகையில் ஜீ.பீ.எஸ். தொழில்நுட்பம் (GPS Technology) மற்றும் ஏனைய தொழில்நுட்ப நுணுக்கங்களைப் பிரயோகித்து மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துகளை நெறிப்படுத்துதல் முதன்முதலாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் ஆரம்பிக்கப்பட்டது. 2018 ஆம ஆண்டில் எல்லா சொகுசு மற்றும் அதி சொகுசு பேருந்துகளில் ஜீபிஎஸ் உபகரணங்கள் செயற்படும் நிலைக்கு கொண்டு வரப்பட்டதுடன், 2019ஆம் ஆண்டில் அரை சொகுசு பேருந்துகளில் 50%ஆனவற்றில் ஜீபீஎஸ் உபகரணம் செயற்படும் நிலைக்கு கொண்டு வரப்பட்டது.

அவ்வாறே புதிய தொழில்நுட்பங்களுடன் கூடிய கட்டுப்பாட்டுக் கூடமொன்று மூலம் ஜீ.பீ.எஸ். உபகரணம் பொருத்தப்பட்ட பேருந்துகளை நெறிப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வுபகரணத் தொகுதி பயணிக்கும் பேருந்துகளில் வேகத்தினைக் கட்டுப்படுத்தி எச்சரிக்கை சமிக்ஞை ஒன்று பேருந்தினுள் ஒலிப்பதுடன் அதற்கு இணைவாக கட்டுப்பாட்டு அறையில் அது தொடர்பில் குறிக்கப்படுவதாலும் இது வரையில் ஜீ.பி.எஸ். தொழில்நுட்பம் பொருத்தப்பட்டுள்ள பல பேருந்துகள் கூடிய வேகத்துடன் செல்வதைக் கட்டுப்படுத்தியுள்ளன. இதற்கு மேலதிகமாக பொது மக்கள் முறைப்பாடுகள் அலகுடன் இணைக்கப்பட்டுள்ள துரித தொலைபேசி அழைப்புப் பிரிவிற்கு

கிடைக்கும் முறைப்பாடுகளை உடனடியாகத் தீர்ப்பதற்கும் அதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் முடியுமாயுள்ளது.

மேலும், ஜீ.பீ.எஸ். உபகரணங்கள் பொருத்தப்பட்ட பேருந்துகளின் இயக்க நிலைமைகள் குறித்து தகவல்கள் ஓட்டுனர்களுக்கும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் உயர் அதிகாரிகளுக்கும் அறிவூட்டும் நோக்கில் குறுஞ்செய்தி சேவையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், பேருந்துகள் இயங்கும் இடங்கள் குறித்து தகவல்களை பயணிக்கும் மக்களுக்கு அறிவுறுத்துவதற்கு 1955 துரித அழைப்பு இலக்கமொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்காக 2019ஆம் ஆண்டினுள் 3.782 மி. ரூபா திரண்ட செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

10. நிறுவனச் சீர்த்திருத்தங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி

இதன் கீழ் பிரதான செயற்றிட்டங்கள் மற்றும் பணிகள் பல நிறைவேற்றப்படுகின்றன. அதன் பிரகாரம், மூலதனச் செயற்றிட்டங்களின் கீழ்,

- பேருந்துத் தரிப்பிடங்களைக் கட்டுதல் மற்றும் நவீனமயப்படுத்துதல்

பயணிகள் மற்றும் பேருந்து ஓட்டுனர்களின் வசதி கருதி தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் பேருந்துத் தரிப்பிடங்களைக் கட்டுதல் மற்றும் நவீனமயப்படுத்துதல் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பிரகாரம், 2019ஆம் ஆண்டாகையில் கிளிநொச்சி நகரத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் புதிய பேருந்துத் தரிப்பிடத்தின் 50% அளவிலான பணி முடிவுற்று இருந்ததுடன், அமைச்சரவையின் அனுமதியின் பிரகாரம் பக்கமூண நகரத்தில் புதியதொரு பேருந்துத் தரிப்பிடம் கட்டுவதற்கு ஏற்பாடாகியிருந்தது. எனினும், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபையின் அறிவுறுத்தலின் படி கிளிநொச்சி பேருந்துத் தரிப்பிடத்தின் எஞ்சியிருக்கும் கட்டுமானப் பணிகளுடன் வட மாகாண சபைக்கு கையளிப்பதற்கான ஆரம்பத் திட்டங்கள் 2019.12.31ஆந் திகதியாகையில் மேற்கொள்ளப்பட்டு வந்ததுடன், பணிப்பாளர் சபையின் அறிவுறுத்தல் பிரகாரம் பக்கமூண பேருந்துத் தரிப்பிடத்தினைக் கட்டுவதற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு ஏற்பாடுகள் இல்லாமையினைச் சுட்டிக்காட்டி போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டது.

- தே.போ.ஆ. கட்டடத்தைப் புதுப்பித்தல்
- மின்சாரத்தினைச் சிக்கனப்படுத்துவதற்காக நிறுவனத்தினுள் மாற்று மின் உற்பத்தி (சூரிய பேனல்கள்)
- பெஸ்ரியன் மாவத்தை மற்றும் வவுனியா பேருந்துத் தரிப்பிடத் தொகுதிகளைப் புதுப்பிக்கும் நடவடிக்கைகள்
- பெஸ்ரியன் மாவத்தை பேருந்துத் தரிப்பிடத்தில் அங்கவீனப் பிரஜைகளுக்கு வசதிகளை வழங்குதல்

ஆகிய செயற்றிட்டத்திற்காக 2019.12.31ஆந் திகதியில் 12.471 மில்லியன் ரூபா செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக, மீண்டெழும் செயற்றிட்டங்களின் கீழ் பெஸ்ரியன் மாவத்தை மற்றும் வவுனியா பேருந்துத் தரிப்பிடங்களில் மேற்கொள்ளப்படும் பேருந்து இயக்க நடவடிக்கைகளை கண்காணித்தலும்

பேருந்துகளின் தரத்தினைப் பரிசீலிப்பதும் சேவையின் தரத்தினை திருப்திகரமான வகையில் பேணுவதும் மேற்கொள்ளப்படும்.

அதன் பிரகாரம், ஒவ்வொரு வருடமும் நிகழும் புது வருடப் பண்டிகை மற்றும் வெசாக், பொசொன் ஆகிய சமய விழாக்கள் நடைபெறும் காலங்களில் அத்தினங்களுக்கு முன்னர் மற்றும் பின்னர் பொழும்பு உட்பட நாட்டின் பல பிரதான நகரங்களில் கூடிய பயணிகள் கேள்வி எழுகின்றது. இந்நிலைமையினை வெகு காலமாக இனங்கண்டுள்ள தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, அக்காலங்களில் விசேட பேருந்துச் சேவைகளை ஈடுபடுத்தி பயணிகளின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்கின்றது. அதன் படி 2019ஆம் ஆண்டில் விசேட புது வருட சேவையின் கீழ் பெஸ்ரியன் மாவத்தை பிரதான தரிப்பிடத்தில் இருந்து வெளிப் பிரதேசங்களுக்கு தினமும் இலட்சக்கணக்கான பயணிகளை ஏற்றிச் சென்றுள்ளதுடன், தெற்கு அதிவேகப் பாதையின் ஊடாக பெஸ்ரியன் மாவத்தை, மாகும்புர, கடவத்தை, கடுவளை மற்றும் பாணந்துறை ஆகிய பேருந்துத் தரிப்பிடங்களில் இருந்து தினந்தோறும் ஏறக்குறைய பதினையாயிரம் பயணிகள் அளவில் ஏற்றிச் செல்லப்பட்டுள்ளனர். இதற்கு மேலதிகமாக, பண்டிகைக் காலம் முடிவுற்றதன் பின்னர் கொழும்பு உட்பட சனநெருக்கடி மிக்க பிரதேசங்கள் வரை பயணிகளுக்காக மொணறாகலை, பதுளை, கண்டி, நுவரெலியா, ஹற்றன் மற்றும் எம்பிலிபிட்டிய ஆகிய பிரதேசங்களில் மேலதிக பேருந்துச் சேவைகள் செயற்படுத்தப்பட்டன. இவ்விசேட பேருந்துச் சேவை மற்றும் பெஸ்ரியன் மாவத்தை பிரதான பேருந்துத் தரிப்பிடஇயக்கம் மற்றும் பராமரிப்பு செயற்றிட்டத்தின் கீழ் தூரப்பயண சேவை பேருந்துகளுக்கு புதிய விபரக் குறிப்புக்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் அவை தொடர்பில் நடமாடும் சேவைகளை மேற்கொண்டு பின்னூட்டல் செய்தலும் மேற்கொள்ளப்பட்டன. அதன் படி நாட்டின் மாவட்டங்கள் பலவற்றில் 06 நடமாடும் சேவைகளை நடாத்தி 302 பேருந்துகள் 2019ஆம் ஆண்டினுள் பரிசோதிக்கப்பட்டது.

செயற்றிட்டத்திற்காக 2019.12.31 ஆந் திகதியில் 5.286 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

11. தேசிய போக்குவரத்துக் கொள்கையினை இற்றைப்படுத்தல்

2009.10.14ஆந் திகதி அமைச்சரவையினால் அனுதிக்கப்பட்டுள்ள 2018ஆம் ஆண்டாகையில் நடைமுறையில் காணப்பட்ட தேசிய போக்குவரத்துக் கொள்கை தற்காலப் பொருளதார, சமூகத் தேவைகள் மற்றும் போக்குவரத்துத் துறையின் நவீனமயப்படுத்தற் தேவைப்பாடுகள் அடிப்படையில் இற்றைப்படுத்தப்படல் வேண்டும் எனப் பாராளுமன்ற துறைசார் கண்காணிப்புக் கமிட்டியால் செய்யப்பட்ட பரிந்துரை மற்றும் வழிகாட்டிக்கு அமைய 2017ஆம் ஆண்டில் போக்குவரத்துக் கொள்கையினை இற்றைப்படுத்துவதற்கு புத்திஜீவிகள் கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டது. அதன் பங்களிப்பினை வழங்கி அக்கமிட்டியால் வரையப்பட்ட தேசிய போக்குவரத்துக் கொள்கையினை மொழிபெயர்ப்பு செய்தல் மற்றும் அதனை மக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காக பத்திரிகைகளில் வெளியிடுதல் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டது. அதன் பின்னர் தயாரிக்கப்பட்ட போக்குவரத்துக் கொள்கை வரைவினைப் பாராளுமன்ற துறைசார் கண்காணிப்புக் கமிட்டிக்கு அனுப்பி, அதன் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. 2019.12.31ஆந் திகதியாகையில் தற்போது அமைச்சரவையின் அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்காக முன்வைக்கப்பட்டுள்ளது.

12. மாகாணங்களுக்கு இடையிலான பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்

இலங்கையில் பொதுப் பயணிகள் போக்குவரத்துச் சேவையினை மேம்படுத்துவதற்காக பாரிய பணியொன்றினை நிறைவேற்றியவாறு மாகாணங்களுக்கு இடையிலான தனியார் பேருந்துகள் பயணிகள் போக்குவரத்துச் சேவை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் நெறிப்படுத்தப்படுவதுடன், மாகாணங்களுக்கு இடையிலான தனியார் பேருந்துச் சேவையினை உயர் மட்டத்தில் பேணுவதற்கு அவசியமான ஒழுங்குமுறைகளை ஏற்பாடு செய்வதும் பயணிகள் போக்குவரத்து அனுமதிப்பத்திரங்களை வழங்குவதும் மேற்கொள்ளப்படுகின்றன. முாகாணங்களுக்கு இடையிலான பாதைகளில் பொதுப் பயணிகள் போக்குவரத்துச் சேவைக்குள் உள்நுழையும் பேருந்துகளுக்கு பயணிகள் சேவை அனுமதிப் பத்திரங்களை வழங்குதல், விலைமனு கோரல் படிமுறைகளின் ஊடாக மேற்கொள்ளப்படுவதுடன், அவ்வழிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் உச்ச நம்பிக்கையையும் வெளிப்படைத் தன்மையையும் கொண்டதாகக் குறிப்பிட்ட பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

மாகாணங்களுக்கு இடையிலான தனியார் பேருந்துச் சேவைகள் 4 வகைச் சேவைகளைக் கொண்டதுடன், 2019.12.31ஆந் திகதியாகையில் அவ்வச் சேவை வகைக்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

தொடரிலக்கம்	சேவை வகை	பேருந்துகளின் எண்ணிக்கை
1	சாதாரண	1,961
2	அரை சொகுசு	607
3	சொகுசு	428
4	அதி சொகுசு	114
	மொத்தம்	**3,110**

மூலம்- இயக்குதல் மற்றும் சேவைகள் கண்காணிப்புத் திணைக்களம், தேபோஆ

13. பொதுமக்கள் முறைபாடுகள்

பொதுப் பேருந்துச் சேவையினைப் பயன்படுத்தும் பயணிகளுக்கு நம்பிக்கைமிகு, பாதுகாப்புமிகு மற்றும் சௌகரியமிகு சேவையொன்றினைப் பெற்றுக் கொடுத்தல் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஒரே நோக்கமெனினும் எதிர்பார்க்கப்பட்ட சௌகரியமிக்க சேவைக்குப் பதிலாக பயணிக்கும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எனவே,நாள் முழுதும் 24 மணி நேரமும் செயற்படும் விசேட குறி இலக்கம் ஒன்றும் (1955) துரித தொலைபேசி அழைப்பு இலக்கம் ஒன்றும் (0112595555) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக கீழ் கண்டவாறு பொது மக்கள் முறைபாட்டு அலகுகளுக்கு முறைபாடுகள் கிடைக்கப் பெறுகின்றன.


- எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்படும் முறைபாடுகள்
- வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை ஊடாக
- பெஸ்ரியன் மாவத்தை அலுவலகம் ஊடாக

தொ. இல.	விபரம்	குறியீட்டு இல.	முறைபாடுகளின் எண்ணிக்கை	வீதம்
1	அதிகரித்த கட்டண அறவீடு/மீதிப் பணத்தைக் கொடுக்காமை	SE02	1118	22%
2	பிரயாணிகளுடன் முரட்டுத்தனமாக நடந்து கொள்ளுதல்	SE05	1466	29%
3	அளவுக்கு அதிகமான பிரயாணிகளை ஏற்றுதல்	MJ09	299	6%
4	முறையாகப் பயணச்சீட்டுக்களை வழங்காமை	MJ06	506	10%
5	கவனயீனமாக வண்டியை ஓட்டுதல்	MJ11	569	11%
6	வீதி அனுமதிப்பத்திரமின்றி ஓட்டுதல்	MJ05	58	1%
7	இடைப்பட்ட இடங்களில் தேவையின்றி பேருந்தினை நிறுத்தி பயணிகளை ஏற்றுதல்	PC02	111	2%
8	குறிக்கப்பட்ட நேர அட்டவணையை மீறுதல்	MJ02	250	5%
9	குறிப்பிட்ட இடத்திலிருந்து ஆரம்பிக்காமை மற்றும் முடிவிடம் வரை போகாமை	MN02	275	5%
10	பேருந்து பயணிகள் போக்குவரத்திற்கு பொருத்தமான நிலையில் இல்லாமை	SE04	142	3%
11	குளிரூட்டிகள் ஒழுங்கான முறையில் இயங்காமை	MJ04	84	2%
12	கூடிய சத்தத்தில் ஒலிப்பதிவு நாடா/ வானொலியை இயக்குதல்/ பொருத்தமற்ற வீடியோ காட்சிகள்	PC01	94	2%
13	பயணிகள் போக்குவரத்துப் பேருந்துகளுக்கு இடையில் சச்சரவு	பேருந்திற்குப் பேருந்து	70	1%
	மொத்தம்		**5042**	**100%**

- இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊடாக
- ஜனாதிபதியிடம் கூறுங்கள் நிகழ்ச்சி ஊடாக
- மின் அஞ்சல் info@ntc.gov.lk ஊடாக
- பெக்ஸ் ஊடாக

பொது மக்கள் முறைப்பாட்டு அலகிற்கு கிடைகக்கும் முக்கியமான முறைபாடுகளின் வகைப்பாடு

- அதிகரித்த கட்டண அறவீடு/மீதிப் பணத்தைக் கொடுக்காமை
- முறையாகப் பயணச்சீட்டுக்களை வழங்காமை
- நடத்துனர் மற்றும் சாரதி முறையான மரியாதைமிகு சேவையொன்றினை அளிக்காமை
- சொகுசுப் பேருந்துகளில் குறிப்பிட்ட குளிரூட்டல் நிலைமை காணப்படாமை
- கவனயீனமாக அதிவேகத்துடன் வண்டியை ஓட்டுதல்
- கூடிய சத்தத்தில் ஒலிப்பதிவு நாடா/ வானொலியை இயக்குதல்
- அரை சொகுசு/ சொகுசு/ அதி சொகுசு சேவைகளில் குறிப்பிட்ட அளவை விடக் கூடுதலான பயணிகளை ஏற்றுதல்
- அனுமதி அளித்திராத இடங்களில் பேருந்தினை நிறுத்தி பயணிகளை ஏற்றுதல் மற்றும் தேவையின்றி தாமதப்படுத்துதல்
- பேருந்து பயணிகள் போக்குவரத்திற்கு பொருத்தமான நிலையில் இல்லாமை



2019.01.01 முதல் 2019.12.31 வரை கிடைக்கப்பெற்ற முறைபாடுகள்

14. நடமாடும் சோதனையிடல்கள் மற்றும் விசாரணை


(இ) ஆணைக்குழுவினால் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக கணக்குகளுக்கு சீராக்கம் செய்யப்பட்ட ரூபா 40,698,427 பெறுமதியான சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்களுக்குரிய பேரேட்டு கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மீள செலுத்த வேண்டிய ரூபா 59,703,404 க்கு உரிய கேள்வி வைப்புக்கள் பதிவேடும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையினால் அந்த விடயங்களை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஈ) சிசு செரிய, கெமி செரிய மற்றும் நிசி செரிய ஆகிய செயற்திட்டங்களின் கீழ் சேவை வழங்கப்பட்ட நிறுவனங்களுக்கு 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக செலுத்த வேண்டிய ரூபா 30,205,433 தொகையான பொறுப்புக்களுக்காக நிதிக்கூற்றுக்களில் ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, அந்த சேவைகளை வழங்குவதற்காக அரச கொள்கையொன்றின் அடிப்படையில் பொதுத்திறைசேரியிலிருந்து குறித்த கிரயத்தினை மீளளிப்பு செய்து கொள்வதற்கு நிதி வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த ஏற்பாடுகளை கணக்கு வைத்தல் தொடர்பிலான கொள்கையொன்று ஆணைக்குழுவினால் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(உ) இணையத்தளம் ஊடாக பயணிகள் ஆசனங்களை ஒதுக்கும் செயற்திட்டத்தின் பணிகள் நிறைவு செய்யப்பட்டு 2018 ஒக்தோபர் 27 ஆந் திகதி ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 1,750,000 கிரயமான இந்த செயற்திட்டத்தின் கடந்த வருடத்தில் நிறைவு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 1,428,545 பெறுமதியான கணனிகள் அதனுடன் தொடர்புடைய உதிரிப்பாகங்கள் கணக்கிற்கு மூலதனமாக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறல்லாது நடைமுறை வேலைக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்ததுடன் அதனை மீளாய்வாண்டிலும் திருத்தாது கணனிகள் தொடர்பிலான உதிரிப்பாகங்கள் கணக்கு அந்த பெறுமதியினால் குறைத்தும் நடைமுறை வேலைக் கணக்கு அந்த பெறுமதியினால் கூட்டியும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்காக என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சான்றுகள் போதுமானவை மற்றும் பொருத்தமானவை என நான் நம்புகின்றேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும்

கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும்.

பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வினுள் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் ஆளுகைக்குட்பட்ட தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டது.

2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவு என்பவற்றின் தேவைப்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கையில் முனைப்பழியான அபிப்பிராயத்திற்கான அடிப்டை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு கம்பனியால் முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணிச் செல்லப்பட்டிருந்தன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையால் பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டிய எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வணிக செயற்பாடுகளிற்கு வெளியே ஆணைக்குழுவால் செய்துகொள்ளப்பட்ட

ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் கம்பனியின் ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதாக.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புகளை தவிர, ஆணைக்குழுவின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் நிறுவகம் இணங்கியொழுகாதுள்ளமையை.

	சட்டங்கள், விதிகள் / கட்டளைகளுடனான தொடர்பு	விபரம்
(அ)	பீஈடீ 12 ஆம் இலக்க மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.1.2 ஆம் பிரிவு	நிறுவனத்தின் நலன்புரி முன்மொழிவுகள் தொடர்பில் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு அங்கீகாரத்தனைப் பெற்றுக்கொள்ளாது ஊழியர் காப்பீடு மற்றும் ஏனைய நலன்புரி பணிகளுக்காக ரூபா 12,209,422 செலவிடப்பட்டிருந்தது.
(ஆ)	பீஈடீ 2/2015 ஆம் இலக்க மற்றும் 2015 மே 25 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4 ஆம் பிரிவு	இந்த சுற்றறிக்கைக்கு முரணாக கைத்தொலைபேசி இலக்கமொன்று மற்றும் (Apple 11.0 I pad) ஐ பாட் ஒன்றினை கொள்வனவு செய்வதற்காக இரு சந்தர்ப்பங்களில் ரூபா 136,500 மற்றும் ரூபா 223,999 தொகை செலவிடப்பட்டிருந்தது.
(இ)	2016/30 ஆம் இலக்க மற்றும் 2019 திசெம்பர் 29 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை	சுற்றறிக்கையின் பிரகாரம் வாகனங்களினை கழட்டிய கராஜிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் கூறுவிலைகளின் நியாயத் தன்மை தொடர்பில் அரச துறையின் திணைக்களமொன்றின்,

		கூட்டுத்தாபனமொன்றின் அல்லது சபையின் தகுதிவாய்ந்த இயந்திர பொறியியலாளர் ஒருவரின் சான்றிதழொன்றினை பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், ஆணைக்குழுவினால் அவ்வாறானதொரு சான்றிதழினை பெற்றுக்கொள்ளாது வாகனமொன்றினை பழுதுபார்ப்பதற்காக ரூபா 167,847 செலவிடப்பட்டிருந்தது.
(ஈ)	1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 10(5) ஆம் பிரிவு	ஆணைக்குழுவினால் ஒவ்வொரு வருடத்திலும் இறுதியில் உள்ள தேறிய மிகை வருமானத்தின் அனைத்து பணமும் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், 2019 ஆம் ஆண்டில் ரூபா 178,379,348 ஆன மிகையொன்று காணப்பட்ட போதிலும், ரூபா 50,000,000 தொகை மாத்திரம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.
(உ)	நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிற்கைகையின் 8.2.2 ஆம் பிரிவு	மிகைப் பணத்தினை முதலீடு செய்யும் போது நிதி அமைச்சரின் இணக்கப்பாடு மற்றும் குறித்த அமைச்சரின் அங்கீகாரம் ஆகியவை பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளாது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ரூபா 37,397,490 ஆன நிலையான வைப்புக்கள் மற்றும் ரூபா 13,823,174 ஆன திறைசேரி உண்டியல்கள் மீளாய்வாண்டின் போது முதலீடு செய்யப்பட்டிருந்தன. மேலும், 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 528,949,572 தொகை குறுங்கால முதலீடுகளிலும் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

(ஊ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை

(i)	நிதிப்பிரமாணம் 371(2)(ஆ)	விசேட பணியொன்றிற்கான முற்பணத்தினை வழங்கும் போது பதவி நிலைத் தரமுடைய உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் முற்பணங்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு புறம்பாக ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் செயல் நிமித்த உபகட்டுநிதியை வழங்கும் போது ஒரு சந்தர்ப்பத்தில் ரூபா 100,000 ஆன உச்ச எல்லைக்கு உட்பட வேண்டியிருந்த போதிலும், அந்த எல்லையினை விஞ்சி 2019 ஆம் ஆண்டினுள் 22 சந்தர்ப்பங்களில் ரூபா 4,872,137 கூட்டுத்தொகையான முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன.
(ii)	நிதிப்பிரமாணம் 371(5)	ஏதேனும் உபகட்டுநிதி வழங்கப்பட்டு குறித்த பணி நிறைவடைந்த 10 தினங்களினுள் அந்த உப கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 10 சந்தர்ப்பங்களில் ரூபா 737,675 ஆன முற்பணத்தினை தீர்ப்பதற்கு இந்த நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் ஆணைக்குழு அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்க செயலாற்றியிருக்காதமை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கம்பனியின் வளங்கள்,

காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டிருக்காமை.

3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்

(அ) கிளிநொச்சி பேரூந்து தரிப்பிடத்தினை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் 12 மாத ஒப்பந்தக் காலத்தினுள் ரூபா 48,733,045 ஆன கிரயத்தில் நிர்மாணிப்பதற்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்ததாரரின் பதிவு உடன்படிக்கை கைச்சாத்திட்ட திகதியான 2016 திசெம்பர் 29 ஆந் திகதி காலாவதியாகியிருந்தது. அவ்வாறே இந்த ஒப்பந்ததாரரின் நிர்மாணப் பணிகள் கைவிடப்பட்டிருந்த போதிலும், 2006 இன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.11.4 மற்றும் 5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் அவ்வாறு புறக்கணிக்கப்பட்டுள்ள ஒப்பந்ததாரர்களின் பட்டியல்களுக்கு அந்த ஒப்பந்ததாரரின் பெயரை உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், பூர்த்தி செய்யப்பட்ட பணிகளுக்காக ஒப்பந்ததாரர்களுக்கு ரூபா 16,469,363 தொகையும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக உரிய முறையில் குறித்த பணியை பூர்த்தி செய்யாத காரணத்தினால் பொதுமக்களுக்கு பேரூந்து தரிப்பிடத்தினை பயன்படுத்துவதற்கு காணப்பட்ட சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்ட மேற்படித் தொகையானது சிக்கனமற்ற செலவினமொன்றாக அவதானிக்கப்பட்டது. அவ்வாறே இந்த நிர்மாணங்கள் வடமாகாண சபைக்கு தொடர்ந்தும் மேற்கொள்வதற்காக கையளிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2020 யூன் 30 ஆந் திகதி வரையிலும் வடமாகாண சபையால் பொறுப்பேற்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆணைக்குழு தனியார் நிறுவனமொன்றுடன் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி (Process Automation System) (PAS) செயற்திட்டத்தினை முன்னெடுப்பதற்காக ரூபா 31,735,051 தொகை பெறுமதிக்கான உடன்படிக்கைகைச்சாத்திபிப்பட்டிருந்த போதிலும், குறித்த செயற்திட்டம் 2018 நவம்பர் 15 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், 2019 திசெம்பர் 31 ஆந் திகதியிலும் குறித்த செயற்திட்டம் நிறைவு செய்யப்பட்டிராததுடன் அதன் பௌதீக செயலாற்றல் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிராத போதிலும், குறித்த ஒப்பந்ததாரருக்கு ரூபா 23,056,820 செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 219 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணி 199 ஆக காணப்பட்டது. அந்த பதவியணியினில் சிரேஷ்ட மட்டத்திலான 05 பதவிகளும், மூன்றாம் மட்டத்திலான 01 பதவியும், இரண்டாம்மட்டத்திலான 01 பதவியும் ஆரம்ப மட்டத்திலான 13 பதவிகளும் வெற்றிடமாக காணப்பட்ட போதிலும், குறித்த வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஆணைக்குழுவினால் மாகாணங்களுக்கிடையேயான பேருந்துகளில் சேவையாற்றும் சாரதிகள் மற்றும் நடத்துனர்களுக்கு சீருடைகளை வழங்குவதற்காக 2014 ஆம் ஆண்டின போது பெறுகை நடவடிக்கைகள் மேற்கொண்டு தனியார் நிறுவனமொன்றிடமிருந்து 15,000 எண்ணிக்கையான சீருடைகள் ரூபா 8,372,619 ஆன தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்த சீருடைகளில் ரூபா 887,893 பெறுமதியான 1,801 மேற்சட்டைகள் கணக்காய்வுத் திகதியான 2020 யூலை 07 ஆந் திகதி வரையிலும் பதிவேட்டு அறையில் குவிக்கப்பட்டிருந்தமையை அவதானிக்க கூடியதாக இருந்ததுடன் எஞ்சிய சட்டைகள் பகிர்ந்தளிக்கப்பட்டமைக்கான சான்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 1991 இன் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 24 ஆம் பிரிவின் பிரகாரம் பயணிகள் சேவை அனுமதிச்சீட்டுக்களை வழங்குவதற்கும் அனுமதிச்சீட்டுக்களை வழங்குவதற்கு ஆணைக்குழுவிற்குஅதிகாரம் கையளிக்கப்பட்டிருந்ததுடன் 2005 ஒக்தோபர் 06 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் விலைக்கேள்வி கோரப்பட்டு நாளாந்த பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களினை வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், ஆணைக்குழு பயணிகள் அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதற்கு உரிய நடைமுறையொன்றினை அறிமுகப்படுத்தியிருக்கவில்லை. அவ்வாறான போதிலும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை விலைக்கேள்வி கோரல் மூலம் வழங்குதல் தொடர்பில் அதிகாரச்சட்டங்களை திருத்தங்களை உள்ளடங்குவதற்கும் ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அதிகாரச்சட்டத்தினை திருத்தம் செய்யாது ஆணைக்குழுவினால் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் சுமார் 3,103 எண்ணிக்கையான பயணிகள் போக்குவரத்து அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிந்ததுடன் அவற்றுள் 223 அனுமதிப்பத்திரங்கள் கேள்வி கோரல் மூலம் வழங்கப்பட்டிருந்தது. 2,880 அனுமதிப்பத்திரங்கள் விலைக்கேள்வி கோரல் நடைமுறைக்கு முன்னர்

வழங்கப்பட்டள்ளதுடன் அவை வருடாந்த ரூபா 3,000 மற்றும் ரூபா 15,000 ஆன கொடுப்பனவின் அடிப்படையில் புதுப்பிக்கப்பட வேண்டிய அனுமதிப்பத்திரங்களாகும். இதன் பிரகாரம் ஆணைக்குழு அங்கீகரிக்கப்பட்ட நடைமுறையொன்றினை பின்பற்றாது அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு பல்வேறு முறைமைகளினை பின்பற்றியிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே அதிவேக வீதிகளில் நாளொன்றிற்கு ஆகக்குறைந்த தொழில்நுட்ப பெறுமதியின் அடிப்படையில் 61 பயணிகள் போக்குவரத்து அனுமதிப்பத்திரங்களும் ரூபா 2,500 கட்டணத்தின் அடிப்படையிலான 16 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களும் வழங்கப்பட்டிருந்தன.

(எ) 2019 ஆம் ஆண்டின் போது பயணிகள் ஆய்வுகளை மேற்கொண்டமை மூலம் புதிய வீதிகளை இனங்காணல் இடம்பெற்றிருந்ததுடன் ஆணைக்குழுவினால் நாளாந்த பயணிகள் போக்குவரத்து அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறான போதிலும், பாரியளவிலான பயணிகளின் கேள்வி காணப்படும் சந்தர்ப்பங்களில் நாளொன்றிற்கு ரூபா 200, ரூபா 1,000, மற்றும் ரூபா 1,500 ஆகிய நாளாந்த கட்டணங்களை அறவிடும் அடிப்படையில் தற்காலிக பயணிகள் போக்குவரத்து அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஏ) ஆணைக்குழுவினால் பேணிச்செல்லப்படும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் சொத்துக்களினை கொள்வனவு செய்தல் மாத்திரம் பதிவு செய்யப்படுவதுடன் பதிவேட்டில்சொத்துக்களை அகற்றல் தொடர்பிலான தகவல்கள் உள்ளடக்கப்பட்டிராததுடன் ஆண்டினுள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 4,507,651 பெறுமதியான 45 சொத்து உருப்படிகள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே சொத்துக்கள் பதிவேட்டில் பதிவு மேற்கொள்ளும் போது சொத்துக்களுக்காக இனங்காணும் இலக்கமிடல் முறைமையொன்று குறிப்பிடப்பட்டிராத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 1,248,178 பெறுமதியான சொத்துக்களை கைதவிர்த்திருந்த போதிலும், நிலையான சொத்துக்கள பதிவேடொன்று இல்லாதிருந்தமையினால் அந்த சொத்துக்களின் பெறுமதி மற்றும் பெறுமானத்தேய்வு ஒதுக்கம் தொடர்பிலான தகவல்களை கணக்காய்வின் போது சான்றுப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. மேலும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் ரூபா 1,269,973 பெறுமதியான வாசிகசாலை புத்தகங்கள் பதிவேடொன்றில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) ஆணைக்குழுவினால் சபை அலுவலகத்தின் அறையில் மற்றும் வஸ்ரியன் மாவத்தை பொலிஸ் நிலையத்தின் அருகில் அமைந்துள்ள 02 பொது மலசலகூட வசதிகளை வழங்குதல் மற்றும் அதனை பராமரித்தல் ஆகியவற்றுக்காக தனியார் நிறுவனமொன்றுடன் 2010 செப்தெம்பர் 18 ஆந் திகதி முதல் 2020 செப்தெம்பர் 17 ஆந் திகதி வரையிலான 10 வருட காலப்பகுதிக்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இதன்போது இந்த உடன்படிக்கையின் 1,2,7 மற்றும் 8 ஆம் நிபந்தனைகள் மீறப்பட்டிருந்தமையுடன் தொடர்ந்தும் ஆணைக்குழுவிற்கு மக்கள் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்ததுடன், அதன் பிரகாரம் 2015, 2016, 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது கண்டனம் தெரிவித்து கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்த போதிலும், அந்த நிறுவனத்தினால் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன்போது நிறுவனம் உடன்படிக்கை விதிகளை மீறியிருந்த போதிலும், கண்ணகாய்வுத் திகதியான 2020 சனவரி 30 ஆந் திகதி வரையிலும் அதனை திருத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் ஆணைக்குழுவினாலும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, பஸ்ரியன் மாவத்தையில் அமைந்துள்ள பேருந்து தரிப்பிடத்தில் வலதுகுறைந்தோருக்கு உரிய வசதிகளை வழங்குவதற்கு ரூபா 2 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அதன் 50 சதவீதமான பௌதீக செயன்முன்னேற்றமொன்று மாத்திரம் செயன்முன்னேற்ற அறிக்கைகயின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

(ஒ) மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பேரூந்து கட்டணங்களுக்காக முற்கொடுப்பனவு அட்டைகள் முறைமையினை அறிமுகப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அதனை நடைமுறைப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

(ஓ) ஆணைக்குழுவினால் சிசிசெரிய செயற்திட்டத்திற்காக புதிய 50 பேருந்து சேவைகள் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், புதிதாக 06 பேருந்து சேவைகள் மாத்திரம் ஆரம்பிக்க முடியுமாக இருந்தது. இதன் பௌதீக செயன்முன்னேற்றம் 12 சதவீதம் மாத்திரம் என அவதானிக்கப்பட்டதுடன் அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியேற்பாடுகளில் ரூபா 2.6 மில்லியன் எஞ்சியிருந்தது.

டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2019 திசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் முறைப்படுத்தற் தேவைகள் தொடர்பாக 2018 இல 19ஜக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்

1.2 தகுதி வாய்ந்த அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இச்செலவின் பெறுமதி போதியளவான பெறுமதியினைப் பெறுவதனாலும் அதன் மூலம் சொத்தின் பெறுமதியில் அதிகரிப்பொன்று ஏற்பட்டுள்ளதனாலும் அப்பெறுமதி மூலதனமாக்கப்பட்டது.

(ஆ) இவ்வருடத்தில் கிளிநொச்சி பேருந்துத் தரிப்பிடம் வடமாகாண சபைக்கு பொறுப்பளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதுடன், நிதிக்கூற்றுக்களின் பிரச்சினையும் அதன் பின்னர் தீர்க்கப்படும்.

(இ) இயலுமான எல்லா சந்தர்ப்பங்களிலும் குறிப்பேட்டில் இணைத்துள்ளதுடன், இணைக்கமுடியாத விபரமான குறிப்புக்கள் பிரத்தியேகமாக கோவைகளில் பேணப்படுவதுடன், அவ் ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும். எவ்வாறெனினும், இயலுமான எல்லா சந்தர்ப்பங்களிலும் குறிப்பேட்டில் உள்ளடக்குவதற்கு அவதானத்திற் கொள்ளப்பட்டது.

(ஈ) சிசு செரிய, கெமி செரிய, நிசி செரிய செயற்றிட்டங்களுக்காக 2019 திசெம்பர் 31ஆந் திகதியாகையில் செலுத்தியுள்ள தொகைக்கும் ஆண்டிற்கான திறைசேரியில் இருந்து கிடைக்கப் பெற்ற ஏற்பாடிற்கும் இடையிலான வேறுபாட்டிற்கு கடன் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், மேலதிகத் தொகை பின்னைய ஆண்டின் செலவாகக் காட்டப்பட்டுள்ளது. ஆண்டிற்கான செலவினங்களை மேற்கொள்வதற்காகப் போதியளவு திறைசேரி ஏற்பாடுகள் விடுவிக்கப்படாமையே அதற்கான காரணமாகும்.

(உ) இணையத்தினூடாக பயணிகள் ஆசன முன்பதிவுத் திட்டத்திற்குரிய பெறுமானமான 1,428,545 ரூபா தொகைக்குரிய திருத்தத்திற்கான செம்மைப்படுத்தல்கள் நிதிக் கூற்றுக்களில் சரிசெய்யப்பட்டுள்ளன.

02. ஏனைய சட்ட மற்றும் முறைப்படுத்தற் தேவைகள் தொடர்பான அறிக்கை

சட்டதிட்டங்கள் /கட்டளைகள் உசாவுகை

(அ) 1991இன் இல 37 கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சட்ட இல 9 (உ)இன் கீழ் பணிப்பாளர் சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் ஆணைக்குழுவின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு நலன்புரி பொழுதுபோக்கு வசதிகளை வழங்குதல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபையினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) நிறுவனத்தை விட்டும் வெளியே இருக்கையில் தலைவருக்கு கிடைக்கும் பயணிகள் முறைபாடுகள் தொடர்பாக இணையவழி மூலமாக விசாரிப்பதற்கு நிறுவனத்தின் GPS

கட்டுப்பாட்டு அறையுடன் தொடர்புகொள்ள நேரிடுகின்றது. அதற்காக, அது தொடர்பிலான விசேட வசதிகள் கொண்ட கைத்தொலைபேசியொன்று பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் ERP தொகுதியின் அனுமதியினைப் பெற்றுக் கொடுப்பதற்கு I Padஇனைப் பயன்படுத்துவதுடன், அதன் மூலம் தலைவரால் நிறுவனத்தின் CCTV தொகுதியுடன் தொடர்பு கொள்ள முடிகிறது. இது அலுவலகத் தேவையினைக் கருத்திற் கொண்டு வழங்கப்பட்டுள்ளது.

(இ) 2019 செப்தெம்பர் மாதம் 24ஆந் திகதி அலுவலகப் பணியொன்றிற்காகச் செல்லும் போது பெத்தகான பிரதேசத்தில் இயந்திரத்தில் நீர் கசிந்தமையால் விபத்துக்குள்ளாகிய KY-9256 இலக்கத்தைக் கொண்ட மோட்டார் வண்டியினை இயங்க வைப்பதற்கு முடியாத நிலை ஏற்பட்டதால், அச்சந்தர்ப்பத்தில் சாரதி அவசரப் பரிசோதனைக்கு முகவர்களை வரவழைக்க முயற்சித்துள்ளார். எனினும், அதற்கு நீண்ட நேரம் எடுத்தமை மற்றும் மெக்கானிக் ஒருவரை அழைப்பிப்பதில் கடினமான நிலை ஏற்பட்டமையாலும் விபத்து ஏற்பட்ட இடத்திற்கு சமீபத்தில் உள்ள, போக்குவரத்து அமைச்சில் பதிவுசெய்துள்ள மோட்டார்வண்டி பழுதுபார்க்கும் இடமான, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்குரிய வாகனங்களைப் பழுதுபார்க்கும் சஞ்சீவ மோட்டர்ஸ் நிறுவனத்திற்கு அறிவித்து உடனடியாக அவர்களது தொழில்நுட்ப வல்லுனர்களால் பரிசீலனை செய்யப்பட்டது. இலங்கை போக்குவரத்துச் சபை தொழில்நுட்ப நிபுணர்களால் இம்மோட்டார் வண்டியினைப் பரிசீலிப்பதற்கு தொலைபேசி மூலம் அறிவித்திருப்பினும், கடும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக தொழில்நுட்ப நிபுணரினால் உடனடியாக வருகைத்தர முடியாமல் போனது. KY-9256 இலக்கத்தைக் கொண்ட மோட்டார் வண்டி தலைவரின் அலுவலக வாகனம் என்பதால் அவ்வாகனத்தை மிக அவசரமாக பழுதுபார்க்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தமையால் தலைவர் அவர்களின் ஆலோசனையின் பிரகாரம் சஞ்சீவ மோட்டர்ஸ் நிறுவனத்தில் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பழுதுபார்க்கும் நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் இலங்கை போக்குவரத்துச் சபை தொழில்நுட்ப நிபுணரினால் இம்மோட்டார்வண்டி பரிசோதனைக்கு உட்பட்டதுடன், பழுதுபார்க்கப்பட்டதன் பின்னர் பழுதுபார்த்தல் நடவடிக்கை நன்கு மேற்கொள்ளப்பட்டது எனப் பரிந்துரைக்கப்பட்டது.

(ஈ) அத்தியாவசிய சந்தர்ப்பங்களில் பிரயோசனப்படுத்துவதற்கு முடியுமான விதத்தில் தொழிற்படு மூலதனத் தேவைகளுக்கு ஏற்பாடுகளை மீதப்படுத்தி அதிகபட்ச நிதித் தொகையினை திறைசேரிக்கு அனுப்புவதற்கு அவதானத்திற் கொள்ளப்பட்டது.

(உ) தற்காலிக மேலதிகப் பணத்தினை முதலீடு செய்வதற்கு திறைசேரியின் அனுமதியினைப் பெறுவதற்காக தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (உரிய கடிதத்தின் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் இல ஆர்ரீ/பீ/என்ரீசீ/எவ்ஏ/2012/22 கொண்ட கணக்காய்வு விசாரணைக்கான பதிலுடன் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டுள்ளது.) எவ்வாறெனினும் 2012 ஆகஸ்ட் மாதம் 22ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பிலான பொதுக் கூட்டத்தின் போது, குறுகிய கால மேலதிக நிதியங்கள் ஏழு நாள் கோரல் வைப்புக்களில் முதலீடு செய்வதற்குப் பதிலாக ஒரு பகுதியினை கூடிய வட்டி வருமானத்தைப் பெறுவதற்காக நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(பொது முயற்சிகள் தொடர்பிலான பொதுக் கூட்டத்தின் குறிப்புக்களின் பிரதியொன்று இல ஆர்ரீ/பீ/என்ரீசீ/எவ்ஏ/2012/22 கொண்ட கணக்காய்வு விசாரணைக்கான பதிலுடன் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டுள்ளது.)

அதற்கு மேலதிகமாக தற்காலிக மேலதிகப் பண முதலீடு செய்வதற்கு திறைசேரியின் அனுமதியினைப் பெற்றுக்கொள்வதற்கு போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சிற்கு 2019.02.07ஆந் திகதி கொண்ட கோரிக்கை ஒன்று முன்வைத்துள்ளதுடன் இது வரையில் அதற்கு பதிலொன்று கிடைக்கவில்லை என்பதையும் தயவுடன் அறிவிக்கின்றேன்.

(ஊ) (i) தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் முற்பணம் விடுவிக்கப்படுகின்றது என்பதைத் தயவுடன் அறிவிக்கின்றேன். ஆவ்வாறே செயற்றிட்டங்களுக்காக தூரப் பிரதேசங்களுக்குச் செல்கையில் குறிப்பிட்ட அலுவலர்களுக்கு முற்பணம் வழங்க வேண்டி ஏற்படுவதுடன் அநேகமான சந்தர்ப்பங்களில் காசோலை மூலமாகக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ii) 03 நாட்களுக்குள் முற்பணத்தினைத் தீர்த்தல் மேற்கொள்ளப்படுவதுடன், தவிர்க்க முடியாத காரணங்களால் சில நாட்கள் தாமதப்படினும் அவ்வாறான சந்தர்ப்பங்களில் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியுடன் தீர்த்தல் மேற்கொள்ளப்படுவதுடன், கணக்காய்வு விசாரணையில் சுட்டிக்காட்டுள்ளபடி எதிர்காலத்தில் இவ்வாறான தாமதங்கள் ஏற்படாதிருக்க அவதானத்திற் கொள்ளப்பட்டது.

03 ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்

(அ) ஆலோசனை நிறுவனத்தின் மூலம் வெளியிட்டுள்ள அறிக்கையின் பிரகாரம் தெரிவுசெய்யப்பட்ட விலைமனுதாரர் குறைந்தபட்ச விலையினை முன்வைத்துள்ளதுடன், ICTAD பதிவு C3ஆகும். அது 2017.06.06ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் கமிட்டி அறிக்கையில் அவ்வாறே குறிப்பிடப்பட்டுள்ளது. காலம் நீடிக்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தும் ICTAD பதிவுப் புத்தகத்தின் குறிப்பிட்ட பக்கத்தின் பிரதி கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

துர்மதாச கன்ஸ்டரக்ஷன் அன்ட் என்ரபிரைசஸ் நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் சுகயீனமுற்று ஆபத்தான நிலைமையில் இருப்பதாக அறிவித்து கிளிநொச்சி பேருந்துத் தரிப்பிடத்தின் மீதமுள்ள பணிகளை மேற்கொள்ள முடியாதிருப்பதாக எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தத்தினை முடிவுறுத்தும் நாளன்று காணப்பட்ட முற்பணப் பிணையான 4,896,212.70 ரூபா உரிய வங்கியில் இருந்து அறவிடப்பட்டது. அதன் படி செலுத்தப்பட்ட தொகையானது (16,469,363.48 - 4,896,212.70) 11,573,150.78 ரூபாவாகும்.

ஒப்பந்தகாரரின் ஒப்பந்தம் முடிவடையும் போது செய்துள்ள பணியின் அளவு 15,397,989.93 ரூபா என அரச பொறியிலாளர் கூட்டுத்தாபனம் உறுதிப்படுத்தியுள்ளது. எனினும், மேலே குறிப்பிட்டுள்ளவாறு செலுத்தப்பட்டுள்ள தொகை 11,573,150.78 ரூபாவாகும். மேலும், செயலாற்றுகைப் பாதுகாப்பிற்கு உரிய 2,438,700.00 ரூபாவினையும், தாமதக் கட்டணமான

2,438,625.25 ரூபாவினையும் தேபோஆ அறவிட்டுள்ளதால் 15,397,989.93 ரூபா பணிக்கு தேபோஆ 9,134,450.78 ரூபாவினையே செலவிட்டுள்ளது. (11,573,150.78-2,438,700.00) அதன் பிரகாரம் நிதி இழப்பீடொன்று நிறுவனத்திற்கு ஏற்படவில்லை என்பதைத் தயவுடன் குறிப்பிடுகின்றேன்.

ஓப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் உரிய வழிமுறைகளை முறையாக எடுத்தமையால் முற்பணப் பாதுகாப்பு, செயலாற்றுகைப் பாதுகாப்பு, தாமதக் கட்டணம் என்பனவற்றை அறவிடுவதற்கு இயலுமாயிற்று.

புணிப்பாளர் சபையின் தீர்மானங்களின் பிரகாரம் கிளிநொச்சி பேருந்துத் தரிப்பிடம் வடமாகாண சபைக்கு பொறுப்பளிக்கும் உரிய ஆவணங்கள், கமிட்டி அறிக்கைகள், பொறுப்பளிக்கும் கடிதம் ஆகியனவற்றில் தேபோஆ தரப்பினர் கையொப்பமிட்டு மேலதிக நடவடிக்கைகளுக்காக வட மாகாண சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) இச்செயற்றிட்டம் பிரதான 03 கட்டங்களின் ஊடாக செயற்படுத்தப்படுவதுடன், இக்கட்டங்கள் மூன்றிலும் மென்பொருள் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஏற்கனவே முடிவுற்றுள்ளன. முதிப்பீடு செய்யப்பட்ட அளவினை விட மிகவும் சிக்கலான செயன்முறைகள் இச்செயற்றிட்டத்தினுள் மேற்கொள்ளப்பட்டமை, ICTA நிறுவனத்தினால் cloud வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பட்ட தாமதம், நிறுவனத்தினுள் காணப்படும் 3200 கோவைகளை ஸ்கேன் செய்து மென்பொருளினுள் உட்படுத்துவதற்கு காலம் எடுத்தல், ஒவ்வொரு செயன்முறைக்கும் தயார் செய்யப்பட்ட மென்பொருள் அபிவிருத்தி விபரக்குறிப்புக்களைக் (Software Requirement Specification) கொண்ட செயன்முறைகளின் வசதிக்காக பல்வேறு சந்தர்ப்பங்களில் மாற்றுமாறு கோரல்களை முன்வைத்தல், இதுவரையில் Manual பணிகளை மேற்கொண்ட அலுவலர்களை இம்மென்பொருளினுள் உட்படுத்தவதற்கு குறிப்பிடத்தக்களவு காலம் எடுத்தல் போன்றே நேரடி செயற்பாட்டில் (Live Operation) ஈடுபடுகையில் பயனாளருக்கு மிகவும் எளிதாக (User Friendly) மேற்கொள்வதற்கு தேவையான சூழலைக் கட்டியெழுப்புதல் போன்ற காரணங்களால் இச்செயற்றிட்டத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட காலத்தை விடவும் கூடுதலான காலம் எடுக்க நேரிட்டது. தற்போது இந்த மென்பொருள் நேரடி செயற்பாட்டில் (Live Operation) மேற்கொள்ளப்படுகின்றது.

(இ) தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் முடிடையும் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 219 ஆகும். ஆதன் பிரகாரம், 2020 யூலை மாதமாகையில் சிரேஷ்ட மட்டத்தில் 05 வெற்றிடங்களை பணிப்பாளர் (திட்டமிடல்) பதவி பூர்த்தி செய்துள்ளது. மீதமுள்ள 04 பதவிகள் போக்குவரத்து பொறியியலாளர் பதவிகளாகும். போக்குவரத்து பொறியியலாளர் பதவிகளுக்கு பலமுறை அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புகள் மற்றும் பதவியுயர்வுகள் படிமுறைகளின் படி பத்திரிகை அறிவித்தல்கள் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சை மேற்கொள்ளப்பட்டது. எனினும் அப்பதவிகளுக்கு தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் பொறியியலாளர் கொடுப்பனவு கிடைக்காமையால் பதவியினை ஏற்றுக் கொள்வதை நிராகரித்தனர்.

வவுனியா அலுவலகத்தில் மூன்றாம் நிலை பதவியான கனிஷ்ட முகாமைத்துவப் பதவிக்காகக் காணப்பட்ட வெற்றிடம் தற்போது நிரப்பப்பட்டுள்ளது. இரண்டாம் நிலை பதவிகளுக்காக

2019.09.17ஆந் திகதி வெளியிடப்பட்ட பத்திரிகை அறிவித்தல் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதுடன், பாராளுமன்றத் தேர்தல்கள் முடிவடைந்ததன் பின்னர் குறிப்பிட்ட நேர்முகப் பரீட்சை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

ஆரம்ப நிலைபதவிகளுக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதுடன், பாராளுமன்றத் தேர்தல்கள் முடிவடைந்ததன் பின்னர் குறிப்பிட்ட நேர்முகப் பரீட்சை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

(ஈ) சாரதிகள்/ நடத்துனர்கள் ஆகியோருக்கு விநியோகிப்பதற்கான சீருடைகள் அவர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட ஆவணக் கோவைகளில் காணப்படுவதுடன், தேவையான சந்தர்ப்பத்தில் முன்வைக்கலாம்.

அவ்வாறே, இந்த 1801 சீருடைகள் மீதமுள்ளமைக்கு காரணம் சீருடைகளைப் பகிர்ந்தளிக்கும் போது அது தொடர்பில் எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளல் மற்றும் பேருந்து வேலைநிறுத்த நடவடிக்கைகள் மேற்கொண்டமை என்பதுடன், எதிர்காலத்தில் சீருடைகளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(உ) 1991 இல 37 கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரதத்தின் பிரகாரம் புதிய பயணிகள் அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதற்கு அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்ட வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. அதன் படி சாதாரண பாதைகளில் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காக 2005இல் அனுமதிக்கப்பட்ட இல அப/05/1461/031/036 கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரமும் அதிவேகப் பாதைகளில் புதிய பயணிகள் அனுமதிப்பத்திரத்தினை வழங்குதல் 2017இல் அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்ட இல 17/0700/709/ 029கொண்ட நிருபத்தில் குறிப்பிட்டுள்ள வழிமுறையின் கீழ் மேற்கொள்ளப்படும்.

2017 அமைச்சரவையின் தீர்மானத்திற்கு முன்னர் 2014ஆம் ஆண்டின் இல அப/14/1061/535/004- I கொண்ட அமைச்சரவைப் பத்திரத்தின் மூலமும் அதிவேகப் பாதையின் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், 16/0065/709/003 கொண்ட அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட வழிமுறையினாலும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்கு விலைமனு கோரப்பட்டதுடன், சட்ட நடவடிக்கைகள் காரணமான அவ்விலைமனு கோரலை இரத்துச்செய்ய வேண்டியேற்பட்டது.

மேற்குறிப்பிட்ட அனைத்து அமைச்சரவைத் தீர்மானங்களில் குறிப்பிட்டுள்ள வழிமுறைகளை இரத்துச் செய்து புதிய வழிமுறையொன்றினைத் திட்டமிடும் நோக்கில் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் புதிய வழிமுறையொன்றினைத் தயாரிப்பதற்கு அப/19/0409/123/17 கொண்ட அமைச்சரவை நிருபத்தின் பிரகாரம் கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அக்கமிட்டி மூலம் வழிமுறையொன்றினை வரைவு செய்து அமைச்சிடம் சமிர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆவ்வாறே தேசிய போக்குவரத்து ஆணைக்குழச் சட்டத்தினை திருத்தியமைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அப்பிரேரிக்கப்பட்டுள்ள திருத்தங்களை வரைவு செய்து

அமைச்சரவையின் அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கு போக்குவரத்துச் சேவைகள் முகாமைத்தவ அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் சட்டத்தினை திருத்தியமைப்பதற்கு பல சந்தர்ப்பங்களில் முயற்சி எடுப்பினும் அது நிறைவேறவில்லை.

(ஊ) 1991 இல 37 கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 24ஆவது பிரிவின் பிரகாரம் பயணிகள் அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதற்கு ஆணைக்குழுவிற்கு ஏற்பாடுகள் காணப்படினும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை திறந்ததாகவும் வெளிப்படைமிக்கதாகவும் வழங்கும் வழிமுறை குறித்து சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. தே.போ.ஆ. நிறுவப்பட்ட காலத்தில் இருந்து 2008ஆம் ஆண்டு வரை பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் ஒவ்வொரு தனிநபரும் கோரும் அடிப்படையிலேயே வழங்கப்பட்டது. அதன்போது திறந்ததன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை இருக்கவில்லை. அப்பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களின் ஆயுட்காலம் தொடர்பில் எதுவிதக் குறிப்பும் இல்லாதிருந்ததுடன் 3000.00 ரூபா தொகையொன்றினைச் செலுத்தி வருடாந்தம் இற்றைப்படுத்தப்பட்டது.

2005ஆம் ஆண்டில் அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்ட இல அப/05/1461/031/036 கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்கும் போது விலைமனு முறைமையினைப் பின்பற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டதுடன், அம்முறைமை ஊடாக முதன்முதலாக 2008ஆம் ஆண்டில் விலைமனு கோரப்பட்டுள்ளது.

அதன் படி தே.போ.ஆ. நிறுவப்பட்ட காலத்தில் இருந்து 2008ஆம் ஆண்டு வரை அதாவது ஏறக்குறைய 15 வருட காலம் விண்ணப்பதாரியின் கோரலின் பேரில் மற்றும் தலைவரின் விருப்பப்படி பயணிகள் சேவை அனுமதிப்பத்திம் வழங்கப்பட்டுள்ளது.

2019.12.31ஆந் திகதியில் பெற்றுக் கொடுத்த தரவுகளின் படி செல்லுபடியாகும் 3103 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களில் விலைமனு முறைமையின் கீழ் வழங்கப்பட்டு செல்லுபடியாகும் எனக் காணப்படுவது 223 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் ஆகும். அதன் படி செல்லுபடியாகும் நிலையில் காணப்படும் எஞ்சிய 2880 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களும் விலைமனு முறைமை அமுல்படுத்தப்படுவதற்கு முன்னர் வழங்கப்பட்ட பயணிகள் சேவை அனுமதிப் பத்திரங்களாவதுடன், தேசிய பொக்குவரத்து ஆணைக்குழச் சட்டத்தின் 24 மற்றும் 30ஆவது பிரிவுகளின் பிரகாரம் அனுமதிப்பத்திரமொன்றின் காலம் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள தீர்மானத்தின் பிரகாரம் அனுமதிப்பத்திரங்களின் காலம் குறித்து எவ்விதக் குறிப்பும் இல்லை.

தற்போது காணப்படும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் ஏதேனும் திருத்தத்திற்கு உட்படும் சந்தர்ப்பத்தில் (பாதை திருத்தம் மற்றும் உறவுமுறை மீதான உரிமை மாற்றம்) அப்பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களின் வருடாந்த இற்றைப்படுத்தும் கட்டணம் 3000.00 ரூபா முதல் 15,000.00 ரூபா வரை அதிகரிக்கப்படும்.

அதன் பிரகாரம், தற்போது செல்லுபடியாகும் நிலையில் காணப்படும் 223 பயணிகள் சேவை அனுமதிப்பத்திர விலைமனுக் கட்டணம் மற்றும் 3000.00 ரூபா அறவிடலுடனும், 922 அனுமதிப்பத்திரங்கள் 15,000.00 ரூபா அறவிடலுடனும் வருடாந்தம் இற்றைப்படுத்தப்படும்.

எஞ்சிய பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களுக்கு அறவிடப்படுவது 3000.00 ரூபா என்பதுடன், அத்தொகையினை அதிகரிப்பது குறித்து அவதானத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் அதிவேகப் பாதையில் தற்காலிக அனுமதிப்பத்திரங்களில் இயங்கும் பேருந்துச் சேவைகளுக்கு 48 நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காக இல 26 விலைமனு 2018ஆம் ஆண்டில் கோரப்பட்டதெனினும் அதனைத் திறந்து அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு எதிராக பேருந்து உரிமையாளர்களால் வழக்கு தொடரப்பட்டது. அதன் பிரகாரம் விலைமனுவிற்கான தடை உத்தரவு காரணமாக அதனை திறப்பதற்கு முடியாதிருப்பதுடன், அதன் காரணமாக தற்காலிக அனுமதிப்பத்திரங்களில் இயங்கும் பேருந்துகளுக்கு நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு இயலாதுள்ளது. பயணிகளின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு மேலும் தற்காலிக அனுமதிப்பத்திரங்களை வழங்குவது அவசியமாக உள்ளது.

(எ) ஏற்கனவே தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் புதிய அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு செற்படுத்தப்படும் வழிமுறையான திறந்த விலைமனு கோரலில் மனுதாரர்களால் தமது சேவையின் மூலம் ஈட்ட முடியுமான வருவாயை விட பெரும் விலைமனுத் தொகை மீது விலைமனு கோரும் போக்கு உள்ளது. ஆதன் காரணமாக மனுதாரர்களுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்கிடினும் அச்சேவைகள் தொடர்ந்தும் மேற்கொண்டு செல்லாததுடன், காலப்போக்கில் உரிய விலைமனு கோரப்பட்ட பேருந்து சேவையிலிருந்து விலகிவிடும். ஆதன் படி, தற்பொது புதிய முறைமை ஒன்று திட்டமிடப்பட்டு வருவதுடன் அம்முறைமையினை அமைச்சரவையில் சமர்ப்பித்து அனுதி கிடைத்ததன் பின்னர் புதிய பாதைகளுக்கு விலைமனு கோருவதற்கு இடமுண்டு.

மேலும், பாரிய பயணிகள் கேள்வி காணப்படும் சந்தர்ப்பங்களில் மற்றும் நிரந்தர சேவைகள் பேருந்துகள் இயங்க வராத சந்தர்ப்பங்களில் 200 ரூபா, 1000 ரூபா மற்றும் 1500 ரூபா என நாளாந்தம் கட்டணம் அறவிடலின் மீது தற்காலிக் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படினும் அப்பயணிகள் கேள்வி தொடர்ந்தும் காணப்படமாட்டாது. ஆவ்வாறே பயணிகள் தேவை மீது நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களைக் கொண்ட பேருந்துகள் மேற்படி கட்டணம் அறவிட்டு வேறு பாதைகளுக்கு தற்காலிகமாக அனுப்பப்படும். அதன் படி வார இறுதி மற்றும் நீண்ட வார இறுதி நாட்கள் காணப்படும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் கூடுதலான பயணிகள் கேள்வி காணப்படுவதால், அவ்வார இறுதி நாட்களுக்கு மாத்திரம் செல்லுபடியாகும் வகையில் நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்ப்த்திரங்களை வழங்குதல் பயனுள்ளதாக அமையாது.

(ஏ) எதிர்காலத்தில் சொத்துக்கள் பதிவேட்டிலிருந்து சொத்துக்களை அகற்றுதலைக் குறிப்பிடுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே கொள்வனவு செய்யப்பட்ட அச்சொத்துக்கள் அனைதையும் சொத்துக்கள் பதிவேட்டில் குறிப்பிட்டு இற்றைப்படுத்தவதற்கு மற்றும் சொத்துக்கள் பதிவேட்டில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஓவ்வொரு வருடமும் கொள்வனவு செய்யப்படும் நூலகப் புத்தகங்கள் உரிய வருடத்திற்கு வெவ்வேறாகப் பதிவேட்டில் உட்படுத்தப்பட்டுள்ளது.

(ஐ) பெஸ்ரியன் மாவத்தை பொலிஸ் காவல்கூடத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள மலசலகூடத் தொகுதியில் பொது வசதிகளை வழங்குவதற்கு பராமரிதது பயணிகள் பாவனைக்கு பேணுவதற்காக தனியார் நிறுவனமொன்றான மேதா என்ரபிரைசஸ் நிறுவனத்துடன் 2010.09.18ஆந் திகதி முதல் 2020.09.17ஆந் திகதி வரை 10 ஆண்டு காலத்திற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இம்மலசலகூடத் தொகுதியைப் பழுதுபார்ப்பதற்காக 58 இலட்சம் ரூபா செலவொன்றினை மேதா என்ரபிரைசஸ் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஓப்பந்தத்தின் பிரகாரம் இருதரப்பினரினதும் இணக்கத்தின் மீது ஆரம்பத்தில் 525,000.00 ரூபா மாதாந்த வாடகை அடிப்படையின் கீழ், அதன் நிர்வாகத்தினை அந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. ஓவ்வொரு வருடமும் இம்மாதாந்த வாடகை 10%ஆல் அதிகரிக்கப்படும். அதன் படி 2020ஆம் ஆண்டாகையில் மாதாந்த வாடகை 768,652.50 ரூபா ஆகும்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு மேற்கொள்ளப்பட்ட மாதாந்த கொடுப்பனவு உட்பட நிபந்தனைகள் சிலவற்றைத் தவறியமை காரணமாக அந்நிறுவனத்தின் முகாமையாளர் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு அழைப்பித்து பல் சந்தர்ப்பங்களிலும் பேச்சுவார்த்தை நடாத்தி கீழ்வரும் இணக்கங்களுக்கு உட்படுத்தப்பட்டார்.

- 2019 திசெம்பர் மாதம் 31ஆந் திகதிக்கு முன் நிலுவையிலுள்ள மாதாந்த வாடகைத் தொகையில் 03 மாதங்களுக்குரிய தொகையைத் தவிர மீதமுள்ள எல்லா நிலுவைத் தொகையினையும் செலுத்துதல்.
- மலசலகூடத் தொகுதியினைப் பராமரிக்கும் போது ஏற்படும் எல்லா பிரச்சினைகளையும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நிர்வாகப் பிரிவிற்கு அனுப்பிவைக்குமாறும் அதன் பிரகாரம் உரிய தீர்வுகளைப் பெறுமாறும்
- மலசலகூடத் தொகுதியினைப் பயன்படுத்துவோரிடம் இருந்து 10ரூபா மாத்திரம் அறவிடுமாறும் அவ் அறவீட்டினை உரிய இடத்தில் காட்சிப்படுத்துமாறும்

பெஸ்ரியன் மாவத்தை பேருந்துத் தரிப்பிடத் தொகுதிக்குரிய வளாகத்தில் பன்னோக்கு போக்குவரத்து மத்திய நிலைய செயற்றிட்டம் 2020ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் கட்டுமானப் பணிகளை ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் அறிவித்தள்ளதனால் பெஸ்ரியன் மாவத்தை பேருந்துத் தொகுதியில் அங்கவீனர்களுக்கு தேவையான வசதிகளை வழங்குவதற்கு ஒதுக்கப்பட்ட தொகையினை, பேருந்து ஊழியர் குழுவிற்கு வசதிகளை வழங்குவதற்கு உத்தேசித்துள்ள கொள்கலன்களைப் பெற்றுக் கொள்வதற்குப் பயன்படுத்த 2019.10.18ஆந் திகதி நடைபெற்ற ஆணைக்குழு கூட்டத்தில் அனுமதி கிடைத்துள்ளது.

(ஒ) 2019 செயற்படு திட்டத்தின் பிரகாரம் பிரீபெய்ட் அட்டை செயற்றிட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு இருப்பினும் இச்செயற்றிட்டம் தேசிய பொக்குவரத்து ஆணைக்குழுவிற்கு மாத்திரம் தனித்து செயற்படக்கூடிய செயற்றிட்டமாக இல்லை. போக்குவரத்து அமைச்சு, இலங்கை மத்திய வங்கி, ஏனைய வணிக வங்கிகள், இலங்கை போக்குவரத்துச் சபை, மேல்மாகாண வீதிப் பயணிகள பொக்குவரத்து அதிகாரச் சபை போன்ற நிறுவனங்கள் பலவற்றின் ஒன்றிணைப்புடன் இச்செயற்றிட்டம் செயற்படுத்தப்பட வேண்டியதாக உள்ளது.

அதன் படி, 2019ஆம் ஆண்டினுள் இச்செயற்றிட்டத்தினைச் செயற்படுத்தும் விதம் தொடர்பில் அனைத்து தரப்பு நிறுவனங்களுடனும் 12 பேச்சுவார்த்தைகள் நடாத்தியுள்ளதுடன், ஏற்கனவெ இச்செயற்றிட்டத்தினைத் துரிதமாகச் செயற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஓ) தேசிய பொக்குவரத்து ஆணைக்குழுவினால் நிசி செரிய செயற்றிட்டம் செயற்படுத்தப்படுவது இலங்கை போக்குவரத்துச் சபையுடன் மாத்திரமே. அதன் பிரகாரம், 2018/2019ஆம் ஆண்டுகளுக்கு இபோசவினால் 128 நிசி செரிய சேவைகள் பரிந்துரைக்கப்பட்டு இச்செயற்றிட்டத்தினுள் உள்ளடக்குவதற்கு 2017ஆம் ஆண்டில் தேசிய பொக்குவரத்து ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. அவ்வாறு அனுப்பப்பட்டுள்ள 128 சேவைகளும் உண்மையிலேயே இயங்குகின்றனவா என்பதைப் பரிசோதனை செய்து ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு 2017.09.03ஆந் திகதி நடைபெற்ற ஆணைக்குழு கூட்டத்தில் அனுமதி பெறப்பட்டது. ஆதன் பிரகாரம், இந்த 128 சேவைகளில் 42 2018ஆம் ஆண்டில் பரிசோதனை செய்யப்பட்டு இயங்குவதாக உறுதி செய்யப்பட்டதன் பின்னர், நிசி செரிய சேவையில் உட்படுத்தப்பட்டது.

அவ்வாறே, இபோசவினால் பரிந்துரைத்த மேற்படி 128 சேவைகளில் 50ஐ ஆரம்பிப்பதற்கு 2019ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்தது. ஆதன் படி 31 சேவைகள் 2019ஆம் ஆண்டினுள் நடமாடும் பரிசொதனைப் பிரிவினால் பரிசொதனை செய்யப்பட்டதுடன், அவற்றுள் 06 சேவைகள் மாத்திரமே இயங்குவதாக உறுதிப்படுத்தப்பட்டது. 25 சேவைகள் இயங்காதிருப்பதாக உறுதியாகியது. ஆதனால், அவ் 06 சேவைகளுக்கு மாத்திரம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இவ்வருடத்தில் மீதமுள்ள சேவைகளை பரிசோதனை செய்வதற்கு நடமாடும் பரிசோதனைப் பிரிவிற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளன.